# அரசியல் தலையீடில்லாத நிபுணர் குழு கல்வித் திட்டங்களை வகுக்கவேண்டும்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:155
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆடி 2 ஜ: அவ் 1 வியாழக்கிழமை [17-7-69]

## உபசபாநாயகர் யோசனை

அளவெட்டி, புதன்
''இன்று அரசியல் தலையீடு இருப்பதால் தான கல்வி முன்னேறவில்லை. வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் கல்வி அமைச்சராகும்போது புதிய, புதிய திட்டங்களை வகுக்கின்றனர். இந்தத் திட்டங்களுக்கு எமது பிள்ளைகள் பலியாகிறார்கள். ஆதலால் அரசியல் தலையீடு இல்லாத வகையில் கல்வி நிபுணத்துவம் பெற்ற குழுவிடம் கல்வித் திட்டங்களை ஒப்படைத்தால் தான் ஒரு நல்ல நிலை கல்வித்துறையில் ஏற்படும்.''

இவ்வாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம் பி.யுமான திரு. எஸ். சிவசிதம்பரம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி பரிசளிப்பு, ஸ்தாபகர் தினம், 75-வது ஆண்டு நிறைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் உபசபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எமது நாடு ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் வசம் இருந்த காலத்தில் நாம் அவர்களுக்கு அடிமைப்பட்டிருந்தோம். இந்த மூன்று இனத்தவர்களிலும் ஆங்கிலேயாதான் மிகவும் கெட்டிக்காரர்கள். மற்ற இரு இனத்தவர்களும் எம்மை ஆளுவதில் தான் அடிமைத்தனம் காட்டினர்கள். ஆனல் ஆங்கிலேயர் எம்மை ஆளுவதுடன் எமது மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றையும் அடிமைப்படுத்தி தமது மொழி, கலை, கலாச்சாரத்தை எம்மிடையே புகுத்தினர்கள்.

### நாவலர் தோன்றினர்

இந்நிலையில்தான் நாவலர் தோன்றி அவர்களுக்கு எதிராகப் புரட்சி செய்து எமது உரிமையைப் பெற முனைந்தார். அவர் தோன்றியது போல இப்பகுதியில் கந்தையா வாத்தியார் தோன்றினர் என்றால் மிகையாகாது- அன்று இக்கிராமத்தில் எத்தனையோ தனவந்தர்கள் இருந்தபோதும் அவர்கள் மாணவர்கள் நன்மை அடையவேண்டும் என்பதற்காக ஒரு கல்லூரியை அமைக்க முனையவிலலை. ஆனல கந்தையா வாத்தியார் தான் நலல மனத்துடன் இக்கலலூரியை ஸ்தாபித்தார். இன்று கல்வி நூற்றாண்டுவிழா கொண்டாடும் வேளையில அவருடைய நூற்றாண்டு பிறந்த நாளும் வந்துள்ளது சாலச்சிறந்தது.

திரு. சி. சுப்பிரமணியம் (ஒறேற்றர்) பேருரை நிகழ்த்தினர்.

திருமதி ஏ. சுப்பிரமணியம் பரிசிலகள் வழங்கினர். உடுவில எம். பி. திரு. வி. தர்மலிங்கம் நன்றியுரை கூறினர்.

மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# அப்பல்லோ-11 வீரர் மூவரும் அம்புலிக்கு புறப்பட்டனர்

'சட்டர்ன்' ஏவுகணை



## மனித வரலாற்றில் மகோன்னத நிகழ்ச்சி

கென்னடிமுனை, ஜூலை 17

**கென்னடி முனையில் வெப்ப தட்ப நிலைமை சந்திரக்கலம் செலுத்தப்படுவதற்கு மிகவும் உகந்ததாக விருந்தது.**

**அப்பலோ—11 வீரர்கள் மூவரின் உடல் நிலையும் மிகச் சிறப்பாக இருந்தது.**

**சரியாக இரவு 7.02 மணிக்கு சட்டர்ன் ஏவுகணை செலுத்தப்படுவதற்கான ஆயத்தங்கள் எல்லாம் பூர்த்தியாகியிருந்தன.**

**பத்து ஆண்டுகளுக்கு முன் விண்வெளியில் மனிதனை உலாவ விட்டு ரஷ்யா நிகழ்த்திய சாதனையின் உச்சக் கட்டமாக இன்று அமெரிக்கா மூன்று வீரர்களை சந்திரனில் இறங்குவதற்காக அனுப்பி வைத்தது.**

அப்பலோ-11 கலத்தை விண்ணுக்கு எடுத்துச் செல்லும் 'சட்டர்ன்' ஏவுகணையை ஆயிரக்கணக்கான தொழில் நுட்ப நிபுணர்கள் சரிபார்த்து ... கலம் திட்டமிட்டபடி செலுத்தப்படுவதற்கு எல்லாம் சரியாக விருந்ததாக ... முன் அதிபர் நிக்ஸன் அவர்களுடன் டெலிபோனில் பேசினர். இதுவரை மனிதன் மேற்கொள்ளாத மகோன்னதமான பயணம் இது ... சந்திரப்பயண ... பற்றி விவாதித்தார்.

இந்தப்பயணம் திருப்திகரமாகவும் வெற்றிகரமாக ... வைப்பதற்காக 73 நாடுகளிலிருந்து வந்த செய்திகளை அப்பல்லோ-11 வீரர்கள் எடுத்துச் செல்கிறார்கள். பாப்பாண்டவர், இந்திய தற்காலிக அதிபர் திரு கிரி ஆகியவர்களின் செய்திகளும் இதிலிருக்கின்றன இச் ...

கோப்பாயில்

## ஆசிரிய பயிற்சிக்கழக ஐந்தாவது தமிழ் விழா

யாழ்ப்பாணம், வியா.
கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக்கழகத்தின் ஐந்தாவது ஆண்டு தமிழ் விழா இம்மாதம் 20-ம் திகதி நடைபெற விருக்கின்றது. வட மாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் இவ்விழாவை மங்கள விளக்கேற்றி கொடியேற்றி ஆரம்பித்துவைப்பார்.

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக உப அதிபர் திரு. கே. சிவபாலன் தலைமையில் நடைபெறும் உரையரங்கில் பண்டிதர் ஏ.ரி. பொன்னுத்துரை, பண்டிதர் மு. ஆறுமுகம், திரு. நா. க.சண்முகநாதபிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சங்ககால மகளிர், சோழர் கால மகளிர், பல்லவர்கால மகளிர் என்ற தலைப்பில் ...

## ஸ்கந்தா ஸ்தாபகருக்கு சபாநாயகர் புகழ்மாலை

அளவெட்டி, புதன்
இந்த நாட்டில் இன்னல் வந்த நேரத்தில் சேர். பொன். இராமநாதன் போன்றவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியது போல் தமிழுக்கும் சைவத்திற்கும் இன்னல் வந்த நேரத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாவலர் ... வும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்துகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், மாணவர்கள் இந்த நாட்டின் பெரும் செல்வங்கள் அவர்கள் பெரு நோக்கம் படைத்தவர்களாக வாழப் பழகிக் கொள்ள ...

கடல் பிரச்னை தீர்ந்தது:

## சாவக்காடுக்கு மஞ்சள் பாஷையூருக்கு நீலம்

யாழ்ப்பாணம், வியா.
பாஷையூர் மீனவர்களுக்கும், சாவக்காடு மீனவர்களுக்குமிடையே இருந்து வந்த நீண்ட நாள் கடல் பிரச்னைகள் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தினதும், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தினதும்வேண்டுகோளைத் தொடர்ந்து வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டனல் நேற்று சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இருபகுதி மீனவர்களுக்கு மிடையே மீன்பிடிப்பதில் கடல் எல்லைப் பிரச்னை, படகுகளை மாறி மாறிச் சேதப்படுத்துவது, கடலுக்குள் தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்குவதுபோன்ற பல அசம்பாவிதங்கள் நடப்பதாகக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே இச் சமாதானப்பேச்சுவார்த்தை நேற்று நடாத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் ஒரு மீனவருக்கு அரைவாசித் தலைமயிரையும், அரைவாசி மீசையையும் மற்றக் கோஷ்டியினர் அகற்றி வீதியில நடக்க விட்டதாகவும் பொலிஸ் சுப்பிரின்டனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இருபகுதியினரும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டபோது உடுவில் எம் பி.யும் கலந்துகொண்டார்.

பொலிஸ் சுப்பிரின்டனின் ஆலோசனையைத் தொடர்ந்து சாவக்காடு மீனவர்கள் மஞ்சள் நிறத்தைத் தங்கள் வலைகளுக்கும், வள்ளங்களுக்கும் பூசவேண்டும் என்றும், பாஷையூர் மீனவர்கள் நீலநிறத்தைத் தங்கள் வலைகளுக்கும், வள்ளங்களுக்கும் பூசவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

(கா. நி.)

''பெரும் முதலாளிகளுக்கு

## வழங்கப்பட்ட நிலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியது போல் தமிழுக்கும் சைவத்திற்கும் இன்னல் வந்த நேரத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாவலர் பெருமான் தொண்டாற்றியது போல் சுன்னுகப் பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகர் திரு கந்தையா உபாத்தியாயர் அவர்களுடைய தொண்டு அளப்பரியது.

இவ்வாறு ஆட்சிமன்ற சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா நேற்று மாலை சுன்னுகம் ஸ்கந்தவரோதய கல்லூரி ஸ்தாபகர் நூற்றுண்டு விழாவும் கல்லூரி 75-ம் வருட நிறைவு விழா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், மாணவர்கள் இந்த நாட்டின் பெரும் செல்வங்கள் அவர்கள் பெரு நோக்கம் படைத்தவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

ஆட்சிமன்றத்தில் உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கமும் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரமும் 'கண்ணியமாக கடமையாற்றுகின்றுர்களென்றும் இருவரும் ஐக்கியமாக இங்கு ஒரே மேடையில் காணப்படுவது அரசியலில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுவிட்டதோ! எனத் தம்மை நினைக்கத் தூண்டுகிறதென்றும் அவர் குறிப்பிட்டார்.

திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் சங்ககால மகளிர், சோழர் கால மகளிர், பல்லவர்கால மகளிர் என்ற தலைப்பில் மகளிர் அறுவர் சொற்பொழிவாற்றுவர்.

வித்துவான் க. கி. நடராஜன் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் திருவாளர்கள் இ. நாகராஜன், செ. சுந்தரம்பிள்ளை, சி. குமாரசாமி, என். வீரமணி ஐயர் ஆகியோர் கவிபாடுவர்.

கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெறும் கலையரங்கில் இலக்கியக்காட்சிகளின் அபிநயம், புராண நாடகம் ஆகியனவும் இடம் பெறும். (கா. நி.

## ஐவர் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் கிராமசபையின் நான்காம் வட்டார இடைத் தேர்தலில் முன்னுள் நல்லூர் கிராமசபை உபதலைவரான திரு. சி. கனகரத்தினத்திற்கு எதிராக நான்கு பேர் மனுத்தாக்கல் செய்தனர். தேர்தல் அதிகாரி திரு. கந்தசாமி முன்னிலையில் நேற்று மாலை அபேட்சகர் மனுத்தாக்கல் செய்யப்பட்டபோது பின்வரும் ஐவரும் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். சி. கனகரத்தினம், த. கனகசபாபதி, ம. பழனியப்பன், செ. தனபாலசிங்கம், செ. வல்லிபுரம். (கா. நி.)


## குருமகா சந்நிதானத்துக்கு யாழ் மாநகரசபை வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையின் சார்பில் மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த தேசிக பிரமாச்சாரிய சுவாமிகளுக்கு (குருமகா சந்நிதானம்) நேற்று மாலை நகர மண்டபத்தில் நகர வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாநகரசபை சார்பில் சுவாமிகளுக்கு வரவேற்புப் பத்திரமொன்றை முதல்வர் திரு. நாகராசா வாசித்தளித்தார். பரமாச்சாரிய சுவாமிகள் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து பேசுகையில், நமது கைரேகை ஆண்டவனுல் எழுதப்பட்டதென்றும், சகல மதங்களும் ஒரே தீர்ப்பையே வழங்குகின்றன என்றும் குறிப்பிட்டார். (கா. நி.)

## இருபதாம் நூற்றுண்டின் புகழ்மிக்க மனிதர்கள்



அப்பல்லோ - 11 விண்கலத்தில் சந்திரனுக்குப்போகும் சரித்திரப் புகழ் மிக்க மூன்று அமெரிக்க வீரர்கள் இவர்கள்தாம், (இடமிருந்து வலம்) முதலில் காணப்படுபவர் நீல் ஆம்ஸ்ட்ரோங். சந்திரனில் முதன் முதல் காலடி எடுத்துவைக்கும் பாக்கியத்தைப் பெற்றவர். மூன்ருவதாகக் காணப்படும் எட்வின் ஆல்டிரின், ஆம்ஸ்ட்ராங்கிற்கு சற்றுபின்னுல சந்திரனில்இறங்கும் இரண்டாவது மனிதர். சந்திரக்கலம் தாய்க் கப்பலிலிருந்து பிரிந்து சந்திரனில் இறங்கும்போது அதனை இவர்தான் செலுத்துவார். நடுவில் காணப்படுபவர்தான் மைக்கேல் கொல்லின்ஸ். சந்திரக்கலம் பிரிந்துசென்ற பின் அவர்கள் திரும்பிவந்து இணையும்வரையில் இவர் சந்திரமண்டலத்தில் தன்னந்தனியாக தாய்க்கலத்தில் சந்திரனைச் சுற்றி வலம்வந்துகொண்டிருப்பார்.

...லும் 'சட்டர்ன்' ஏவுகணையை ஆயிரக்கணகான தொழில் நுட்ப நிபுணர்கள் சரிபார்த்து முடிககிறுர்கள். கலம் திட்டமிட்டபடி செலுத்தப்படுவதற்கு எல்லாம் சரியாக விருந்ததாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனா.

விண்வெளி வீரர்கள் தமது கலத்துக்குள் பிரவேசிக்கு பேசினுர். இதுவரை மனிதன் மேற்கொள்ளாத மகோன்னதமான பயணம் இது என்று அவர் சந்திரப்பயணத்தைப்பற்றி விவாதித்தார்.

இந்தப்பயணம் திருப்திகரமாகவும் வெற்றிகரமாகவும் முடியுமென்று அப்பல்லோ-11 வீரர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள்

சந்திரனில் இறங்கி அங்கு அப்பல்லோ-11 வீரர்கள் எடுத்துச்செல்கிறுர்கள். பாப்பாண்டவர், இந்திய தற்காலிக அதிபர் திரு கிரி ஆகியவர்களின் செய்திகளும் இதிலிருக்கின்றன இச்செய்திகள் 200 மடங்கு சிறியதாக சுருக்கப்பட்டு குண்டூசியின் தலையின் அளவிலும் சிறியனவாக எடுத்துச் செல்லப்படுகின்றதாம்

நேற்று நடாத்தப்பட்டது. (கா. நி.)

## "பெரும் முதலாளிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் பறிமுதல் செய்ய வேண்டும்'

யாழ்ப்பாணம், வியாழன்

''பெரும் முதலாளிகளுக்கும், கம்பெனிகளுக்கும் வழங்கப்பட்ட நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவைகளை ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதுடன், எதிர்காலத்திலும் நிலமற்ற விவசாயிகளுக்கு மட்டுமே காணிகள் வழங்கப்படல் வேண்டும்.''

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் பிரேரணையொன்று இன்று கிளிநொச்சியில் நடைபெறும் விவசாயிகள் மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கின்றது.

சாதாரண ஏழை' விவசாயிகள் பூரணமாக நீர் வசதி பெறத்தக்க முறையில் நீர்ப்பாசனத் திட்டம் திருத்தியமைக்கப்படுவதுடன் வரட்சியான பகுதிகளின் நீர்த்தேவை பூர்த்திசெய்யப்படும் வகையில் மகாவலி கங்கையை வடக்கே திருப்ப வேண்டுமெனக்கோரும் தீர்மானம் ஒன்றும் இன்று சமர்ப்பிக்கப்படும் பத்துப் பிரேரணைகளில் முக்கியமானதொன்ருகும்.

திரு. ஆ. கந்தையா தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் திருவாளர்கள் என். சண்முகதாசன், டி. டி. பெரேரா உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

இரவு கலைநிகழ்ச்சியில் வில்லுப்பாட்டு, நாடகம் ஆகியனவும் இடம்பெறும். (கா. நி)

## கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

விசுவமடு விவசாயப்படை வீரர்கள் 500 நாட்களுக்கு மேலாகவேலை செய்து விட்டபடியால், அவர்களுக்கு காணி வழங்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கிளிநொச்சி எம். பி. கோரியுள்ளார்.

## பிலிப் யாழ். வருவார்

யாழ்ப்பாணம், வியா.

கைத்தொழில் கடற்ருெழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன அடுத்த மாதம் 4-ம் தேதி யாழ்ப்பாணம் வருகிருர் யாழ்ப்பாணத்திலுள்ள தொழிற்சாலையொன்றைத் திறந்துவைப்பதற்காகவே வருகிருர் என்று தெரியவருகிறது.

## 'தமிழருக்கு கொடுத்த வாக்குறுதிகளை அரசாங்கம் புறக்கணித்துவிட்டது'

### செனட்சபையில் நடராஜா

கொழும்பு, புதன்

தமிழர்களுக்கு தேசிய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை புறக்கணித்து விட்டது. ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிங்களவர் தமிழும் தமிழர்கள் சிங்களமும் படிக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தது ஆனுல் ஆட்சிக்கு வந்தபின் சிங்களத்தில் தேர்ச்சியில்லாத காரணத்தால் தமிழர்கள் உத்தியோகங்கள்தான் பறிக்கப்பட்டன. ஒவ்வொரு முறையும் தேர்தல் காலத்தின் போது தமிழர்களின் உதவியை நாடுவதும் பின்னர் கைவிட்டு விடுவதும் ஆட்சிக்குவரும் அரசாங்கங்களின் வழக்கமாகிக் கொண்டிருகிறது

இவ்வாறு செனட் சபையில் நேற்று செனட்டர் எஸ். நடராஜா எடுத்துக் கூறினுர்.

சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான திருத்தப் பிரோரணையைக் கொண்டு வந்து பேசுகையிலேயே திரு. நடராஜா மேற்கண்டவாறு கூறினுர்.

இன்று நாட்டில் சிங்கள பௌத்தர்களுக்கும் தமிழர்களுக்கு மிடையே ஏற்பட்டிருக்கும் பிழவுக்கு அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் நடவடிக்கைகளே காரணம் என்றும் ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழ்மக்கள் தமது ஜனநாயக உரிமையுடன் வாழ முடியாது என்றும் சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழேயே தமிழ்பேசும் மக்கள் இவ்வித உரிமைபெற முடியுமென்றும் மாவட்ட சபைகள் பற்றி நான்குமுறை சிம்மாசனப் பிரசங்கங்களில் கூறப்பட்டபோதும் இது செயல்படுத்தப்படவில்லையென்றும் இம்முறை சிம்மாசனப் பிரசங்கத்தில் அது பற்றிக் குறிப்பிடப்படவில்லையென்றும் தமிழரசுக கட்சியின் திருத்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது'

தமிழ்பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி இம்முறை கிம்மாசனப்பிரசங்கத்தில் ஏதும் குறிப்பிடப்படாதது பற்றியும் கவலை தெரிவிககப்பட்டது.

பொதுவாகவடககுகிழககுமாகாணங்களின் அபிவிருத்திகளில் அரசாங்கம் மாற்ருந்தாய்மனப்பான்மை காட்டுவதாகவும் சுட்டிககாட்டப்பட்டது.

நல்லூரில் சங்கிலிமன்னன் ஆண்ட பகுதிபுனித பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்படவேண்டுமெனவும் கோரிககை விடுககப்பட்டது.

## ஹோட்டல்களவில் வாலிபர் கைதானுர்

யாழ்ப்பாணம், வியாழன்

நாற்பத்தைந்து பெறுமதி வாய்ந்த கதிரைகளைக் களவாடியதாகக் கூறப்படும் வாலிபர் ஒருவரைக் கரையூர்ப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பொன்னுத்துரை நேற்றிரவு லாவகமாகக் கைப்பற்றினுர்.

திகிலூட்டும் இந்தக் களவுச் சம்பவம் யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபல்யம் வாய்ந்த ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது.

சுமார் 4 500 ரூபா பெறுமதி வாய்ந்த கதிரைகளைக் களவாடியதென்ற சந்தேகத்தில் புங்குடுதீவைச் சேர்ந்த சுவாமிநாதர் என்ற 25 வயது வாலிபரைக் கரையூரில்வைத்துக் கைதுசெய்ததோடு, கரையூரிலுள்ள 10 வீடுகளிலிருந்து களவாடப்பட்ட 45 கதிரைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட வாலிபர் குறிப்பிட்ட ஹோட்டலில் முன்னர் வேலைசெய்து பின்னர் வேலைநீக்கஞ்செய்யப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (கா. நி)

## ட்ருக்டர் விபத்தில் ஒருவர் மரணம்

பூநகரி, புதன்

கிளிநொச்சியிலிருந்து பூநகரிநோக்கி வந்துகொண்டிருந்த ட்ருக்டர் ஆலங்கேணி என்னுமிடத்தில் வீதியைவிட்டுவிலகி மீண்டும் வீதியில் ஏறும்போது திடீரெனப் பெட்டி புரண்டபோது பெட்டியினுள் தூங்கிக்கொண்டிருந்த பூநகரி செல்வியாதீவைச் சேர்ந்த 19 வயது இளைஞர் செல்வத்துரை பாலசுப்பிரமணியமென்பவர் பெட்டியினுள் அகப்பட்டு பரிதாபகரமாக மாண்டார்.

இதுசம்பந்தமாக பூநகரி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ரீ. பரமசாமி விசாரணை நடத்திஞர். பிரேதபரிசோதனையும் செய்யப்பட்டு விபத்திஞல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ட்ருக்டர் சாரதி பொலிஸ் பிணையில் விடப்பட்டுள்ளார்.

## எம்.பி கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா

நெடுந்தீவிலுள்ள வெட்டுக் கழியினுல் ஏற்படும் மண்மாரி பொதுமக்களுக்குக் கொடுக்கும் தொல்லையிலிருந்து விடுவிக்குமாறு கிளிநொச்சி எம். பி கேட்டிருக்கிருர்.

நீர்ப்பாசனப் பகுதி டைரக்டரை நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கும் படி அமைச்சரை எம். பி. கோரியுள்ளார்.

## 9 கிளைகளுடன் தென்னை

பருத்தித்துறை, புதன்

நீர்வேலிச்சந்திக்கருகாமையில்உள்ள ஒருவீட்டில் ஒன்பது வட்டுகளைக் கொண்ட ஒரு தென்னைமரம் உடுப்பெற்றுள்ளது பல உயிரியல் தாவரவியல் ஆசிரியரும் மாணவரும் இம்மரத்தைப் பார்த்துச் செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### தேவை ,

முகாமையாளர்

வலிமேற்குப் பல நோக்கக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கூளாவடி டிப்போவிற்கு ஓர் முகாமையாளர் தேவை. கூட்டுறவுப் பயிற்சி பெற்ருேர் விரும்பத்தக்கது. விண்ணப்பம் செய்வோர், சமாசத்தலைவர், வலிமேற்கு சமாசம், சங்கானை என்ற முகவரிக்கு 24-7-69-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். 1248

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Paul Newman, Diane Cilento
in
HOMBRE

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p m.
Sidcaesar, Veramiles
in
THE SPIRIT IS WILLING
(Technicolor)
Coming Shortly
CRACK IN THE WORLD

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
நீலமலைத் திருடன்
(புதிய கொப்பி)


## கேள்வி விளம்பரம்

### கிராமசபை புங்குடுதீவு


1. ஆவரங்கால் சங்குமாலடி ரோட்.

2. பிள்ளையார் கோவில் ரோட்.

புங்குடுதீவுகிராமசபைஅக்கிராசனர் அவர்களால் 1969-ம்ஆண்டு ஆடி மாதம் 31-ந் திகதி வியாழக்கிழமை காலை 9-30மணிவரை மேற்படிவேலைகளுக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து 'சீல்' வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் ரூபா35 - (முப்பத்தைந்து) கட்டி 30-7-69 புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் புங்குடுதீவு கிராமசபையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்குக்கட்டிய பணத்தில் ரூபா 5/- (ஐந்து) திருப்பிக்கொடுக்கப் படமாட்டாது. விபரங்களை புங்குடுதீவு கிராமசபை அலுவலகத்திலும், உள்ளூராட்சி உதவிஅதிபர், யாழ்ப்பாணம் அவர்களின் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்,
கா. மதியாபரணம்,
தலைவர்.

கிராமசபை அலுவலகம்.
புங்குடுதீவு. 15-7-69.
1661

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
விஜயலக்ஷ்மி
நடித்த
அன்பு வழி

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ்
பேபி ராணி, பத்மினி, சோ, தங்கவேலு
நடித்த
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்





குழந்தைக்காக


## 10 வருட சிறைத்தண்டனை

காலி, புதன்

சமீபத்தில் காலி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஏ. எல் எஸ். சிறிமானே முன்னிலையில் நடைபெற்ற பலாத்கார வழக்கொன்றில் நீதியரசர், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மூவருக்கும் 10 வருடச் சிறைத் தண்டனை விதித்தார்.

ஹினிடுமகொடையைச் சேர்ந்த டி. ஜினதாசா அலயஸ் பற்றி, வி ஜி. நந்தசேன, பிரேமசிறி இரணசிங்கா ஆகிய மூவருமே இவ்வழக்கில் சம்பந்தப்பட்டவர்களாவர்.

## இன்றைய பலன்

ஆடி மீ 2ந் திகதி

17 — 7 — 69

**மேஷம்**- இறைவழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதியும் ஏற்படும். பிதாவழி மூலம் நல்ல செய்தியும்கிடைப்பதற்கு இடமுண்டு. முதியவர் ஒருவர் உங்களுக்குத் தக்க சமயத்தில் ஆதரவு தருவார்.

**ரிஷபம்**- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்குப் பதவிஉயர்வும் ஏற்படலாம். வெளியிடத்தொடர்புகள்மூலம் செல்வாக்கும் பெருகும். நீண்டநாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்.

**மிதுனம்**- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலின்மூலம் உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும். அதிக வருவாய்க்கு இடமுண்டு. கலைஞர்களுக்குப் பொன்னன தினம்.

**கடகம்**- தொழில்புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும். இதன் மூலம் பொருள்விரயத்துக்கும் இடமுண்டு. மேலதிகாரிகளின் கண்டனங்களுக்கும் ஆளாவீர்கள். அடக்கம்வேண்டும்.

**சிம்மம்**- இதயத்தில் அமைதி குன்றும். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்பட

## நல்லூர்வட்டாரபாடசாலைகள் தமிழ்த்திறன் போட்டிமுடிவு

புத்தூர், புதன்

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளின் தமிழ்த் திறன் போட்டிகள் ஏ., பி., ஸி. பிரிவுகளாக முறையே இம்மாதம் 2, 3 4-ம் திகதிகளில் யாழ். பரமேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. இதில் ஆறு கல்லூரிகளும், இரு மகா வித்தியாலயங்களும், இருபத்தேழு கனிஷ்ட வித்தியாலயங்களும் பங்கு பற்றின. போட்டி முடிவுகள் வருமாறு.

'ஏ' பிரிவு: உறுப்பெழுத்து- ப ரஞ்சனி, நாவலர் மகா வித்தியாலயம், க வசந்தி, இந்து மகளிர் கல்லூரி, பா உதயராணி, நாவலர் மகாவித்தியாலயம்.

உரத்து வாசித்தல்- சொஷாமினு, யாழ். இந்து மகளிர்கல்லூரி, ந செல்வக்குமாரன் கொக்குவில் இந்துக்கல்லூரி, செ லலிதகுமாரி, கொக்குவில் ஆர். கே. எம். பாடசாலை.

பா ஓதல்- சி சுகந்தி, கொக்குவில் மேற்கு ஸி. ஸி. ரி. எம். என், ப கிருபாகரன், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, சு பாலகுமாரி, கொக்குவில் மேற்கு ஸி. ஸி. ரி. எம். எஸ்.

சிறு நாடகம்- பரமேஸ்வராக்கல்லூரி, பெரியபுலம் எம். எம். ரி எம். எஸ், தட்டாதெரு இந்து த க. பாடசாலை.

பி பிரிவு: உறுப்பெழுத்து- நா ஜெயகௌரி நாவலர் மகாவித்தியாலம், இ பேரம்பலவாணர், ஆனைக்கோட்டை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாசாலை, கி சிவபாலன் இந்துக்கல்லூரி தமிழ் வித்தியாசாலை.

எழுத்துக்கூட்டல்- இரதிலீலா, உயரப்புலம் எம். எம். ரி. எம். எஸ்., செ குமாரதேவன், இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலை, இ சசிகலா கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை.

உரத்து வாசித்தல்- க லலிதாதேவி, கொக்குவில் இந்துக்கல்லூரி, ச அருணகிரிநாதன், கொக்குவில் இந்துக்கல்லூரி, ப. ஜெயகுமார், இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலை.

பா ஓதல்- மா உதயஸ்ரீ, பரமேஸ்வராக்கலூரி, அ உமாசங்கர், கொக்குவில் இந்துக்கல்லூரி, செ நகுலேஸ்வரி, இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை,

சொற் பொழிவாற்றல்- து. ருபிணுகிரிசாந்தி, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, மா வைகுந்தவாசன், நாயன்மார்கட்டு ம. வி., கா பானுமதி, செங்குந்த இந்துக்கல்லூரி.

சிறு நாடகம்- நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, நல்லூர் தமிழ்ப் பெண் பாடசாலை (மங்கையர்க்கரசி வித்தியாசாலை), பரமேஸ்வரா கல்லூரி.

ஸி பிரிவு- உறுப்பெழுத்து பவானி ப, இந்துமகளிர் கல்லூரி, ஆரோக்கியம்மாவ கனகரத்தின ம. ம. வித்தியாலயம், பரமேஸ்வரி இ நல்லூர் சாதனு பாடசாலை.

எழுத்துக்கூட்டல்- யோகாம்பிகை, சு இந்துமகளிர் கல்லூரி, சாந்தினி இ இ. ம. க., இரத்தினேஸ்வரி க கோண்டாவில், ஆர். கே. எம்.,

கட்டுரை- சரோஜா இ கோண்டாவில் ஆர்.கே.எம் லீலா பொ கோண்டாவில் சைவ வித்தியாசாலை, யசோதரா ஆ இந்துமகளிர் கல்லூரி,

உரத்து வாசித்தல்- சிவபாலன் தி இந்துக்கல்லூரி, தேவதேவன் ஞா இந்துக் கல்லூரி, விபுலானந்தன் ஆர் பரமேஸ்வராக் கல்லூரி

சொற்பொழிவு- சிவபாலன் வ இ இந்துக் கல்லூரி அன்னவாணி சு கோண்டாவில் சைவ வித்தியாசாலை, செந்தூர்க்கதிர் இ இந்து மகளிர் க்ல்லூரி.

பா ஓதல்- புவனராசன் க இந்துக்கல்லூரி, தில்லைச் சந்திரன் கு செங்குந்தா இந்துக்கல்லூரி, லலிதகுமாரி த கோண்டாவில் ஆர். கே. எம்.

நாடகம்- இந்து மகளிர் கல்லூரி: நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம்.

## 'ஈழநாடு' கடிதப் போட்டி (2)

முதலாவது கடிதப் போட்டிக்கு கிடைத்த விடைகள் எம்மை பிரமிக்கச் செய்துவிட்டன. நேயர்கள் அப்பல்லோ பயணம் முதல் சியவச சுவீப் வரை பலவிதமான பிரச்னைகளை ஆராய்ந்து எமக்கு ரஸமான கடிதங்களை எழுதியிருந்தார்கள். பின் வரும் கடிதம் மிகச்சிறந்ததென போட்டிக்குழுவினுல் தெரிவுசெய்யப்பட்டது:

### பரிசுக் கடிதம்

'அப்பல்லோ விண்வெளி வீரர்கள் சந்திரனில் இறங்கி பத்திரமாக பூமிக்கு திரும்பிவிடுவார்கள் என்றே பலரும் விரும்புவார்கள். ஆயினும் கேவலம் மனிதர்கள் அங்கே காலடி எடுத்துவைப்பதால் சந்திரனின் தூய்மை கெட்டுவிடுமோ என்று துயரப் படுகிறவர்களும் உள்ளனர். சூரிய சந்திரர்களையும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தால், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'பி' பிரிவுப் போட்டியில், தெல்லிப்பளை 'கிருஸ்கோப்பஸ்' விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' 'பி' பிரிவு கோஷ்டியும் மோதிக் கொண்டன.

போட்டியின் முடிவில். கிருஸ்கோப்பஸ் கோஷ்டி 1-0 கோலைப் போட்டு வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

ஏ' பிரிவில் சென்.மேரீஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான ஆட்டத்தில் சென். மேரீஸ் வெற்றி பெற்றது.

ஆட்டமுடிவில் இவர்கள் குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 5-4 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றனர்.

இப் போட்டிக்கு திரு. மகேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்

(தே. நி)

உதைபந்தாட்டம்

## றெக்கிளமேசன் வெற்றி

யாழ்ப்பாணம், வியா

விளையாட்டமைச்சினுல் யாழ் மாவட்ட காரியாதிகாரிப் பிரிவுகளிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியில், யாழ்ப்பாணம் 'றெக்கிளமேசன்' சனசமூக நிலையமும், சங்கானை காரியாதிகாரிக் கோஷ்டியும் மோதிக்கொண்ட கடும் போட்டியில் றெக்கிளமேசன் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப் போட்டி தொடங்கி இடைவேளைக்கு சற்றுமுன்பாக றெக்கிளமேசன் கோஷ்டியின் இடதுகரை வீரர் தேவராசா தலையால் அடித்து ஒரு கோலைப் போட்டார்.

இடைவேளையின் பின், சங்கானைக் கோஷ்டியினர் ஆட்டம் தொடங்கி ஒரு சில நிமிடங்களில் ஒரு கோலைப் போட்டனர். இதன்பின் ஆட்டம் மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. ஆட்டம் முடியும் போது இரு கோஷ்டியினரும் சமமான (1-1) கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் மேலும் நீடிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் றெக்கிளமேசன் கோஷ்டியினருக்கு ஒரு "பெனுல்டிக்" கிடைத்தது. இதை இக் கோஷ்டியின் வீரர் புலேந்திரன் அடித்து கோலுக்குள் நுழைந்த்தார் றெக்கிளமேசன் சனசமூக நிலையக் கோஷ்டி 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### கரபந்தாட்டம்

குருநகர் இளைஞர் கலைக் கழகத்தில் நடாத்தப்பட்டு வரும் கரபந்தாட்டப்போட்டியில், "றெக்கிளமேசன்" சனசமூக நிலையமும், குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் றெக்கிளமேசன் சனசமூக நிலையம் எதிர்க் கோஷ்டியை மிக. இலகுவாக 15-11, 15-7 புள்ளிகள் வித்தியாசத்தால் அடுத்தடுத்து வெற்றி பெற்றனர். றெக்கிளமேசன் கோஷ்டியின் காப்டன் தாசீசியஸ், ஜேம்ஸ், நவிச்சந்திரன் ஆகியோரின் விளையாட்டு நன்ருக அமைந்திருந்தது. (தே. நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 17—7—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7 30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் பாடல், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வயலின்இசை, 7-35 குங்குமம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வீணைஇசை, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## உதைபந்தாட்டம் சமமுடிவு

பருத்தித்துறை, புதன்

வடமராட்சிக் காரியாதிகாரியால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி வெற்றிவீரர் கேடயத்தை பெற்ற ஸ்பேஸ் கோஷ்டியும், வல்வெட்டித்துறை யுனேட்டட் கோஷ்டியும் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் மோதிக்கொண்டபோது இரு கோஷ்டிகளும் தலா 1 கோல் போட்டு வெற்றி தோல்வியின்றி விளையாட்டை முடித்துக் கொண்டன. திரு எஸ். கதிர்காமத்தம்பி மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.


கட்டுக் குலையாத





மேனி

நடித்த

விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ்

# குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினிகணேசன்

★ சரோஜாதேவி

நாகேஷ், வாணிஸ்ரீ, சுந்தரராஜன்

நடித்த

கே பாலச்சந்தரின்

# தாமரை நெஞ்சம்

4வது வாரம்!

கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்

(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)

ஆகிய திரைகளில்

ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி

★ சிவாஜிகணேசன்

★ கே. ஆர். விஜயா

முத்துராமன்



கீதாஞ்சலி

நடித்த

# நெஞ்சிருக்கும் வரை

இங்ஸ்லி விஜயா ஸ்ரீ கிருஷ்ண

(கொழும்பு )(மட்டுநகர்) (திருமலை)

மற்றும் சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகிறது

★ ரவிச்சந்திரன்

★ கே. ஆர். விஜயா

★ நாகேஷ் ★ சோ ★ குமாரி சச்சு

இன்னும் பலர் நடித்த

முக்தா பிலிம்ஸ் அளிக்கும்

# நினைவில் நின்றவள்


டும்.

**சிம்மம்-** இதயத்தில் அமைதி குன்றும். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். சிறிய விடயத்துக்கும் அதிககோபம் தோன்றக்கூடும்.

**கன்னி-** பேச்சுவன்மை உங்களுக்குப் பெரும் புகழைத் தேடித்தரும். புதிய நண்பர்களைத் தேடுவீர்கள். சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்துக்கும் இடமுண்டு தன்மான உணர்ச்சி தலைதூக்கும்.

**துலாம்-** எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம். குடும்பத்திலும் பதட்ட நிலை தென்படும். இறை நம்பிக்கையும் எதையும் தாங்கும் இதயமும் வேண்டும்.

**விருச்சிகம்-** விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு தாய்வழித் தினமும் தாராளமாகக் கிடைக்கும். எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள். சிறப்பான தினம்.

**தனுசு-** சமயோசித புத்தி உங்களுக்குத் தாராளமான சித்திகளைத் தேடித்தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

**மகரம்-** அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் அதிக அவதானம் செலுத்த வேண்டும். விஷமிகளின் தொல்லைகள் தோன்றும். சிலருக்கு வெளியூர் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

**கும்பம்-** இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள். அபிப்பிராய பேதங்கள் மறையும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். பந்துக்களின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**மீனம்-** பொருள் விரயத்துக்கு இடமுண்டு கடமையாற்றுமிடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறும். நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றக்கூடும். சிக்கல்களைத் தவிர்க்கவும்.

திருமலை

க. வேலுப்பிள்ளை

'அப்பல்லோ விண்வெளி வீரர்கள் சந்திரனில் இறங்கி பத்திரமாக பூமிக்கு திரும்பிவிடுவார்கள் என்றே பலரும் விரும்புவார்கள். ஆயினும் கேவலம் மனிதர்கள் அங்கே காலடி எடுத்துவைப்பதால் சந்திரனின் தூய்மை கெட்டுவிடுமோ என்று துயரப்படுகிறவர்களும் உள்ளனர். சூரிய சந்திரர்களையும் நவக்கிரகங்களையும் வழிபாடுசெய்வோர் கு இந்த நிலா யாத்திரை கலக்கத்தை கொடுத்திருக்கிறது. இன்னொரு விஷயம் சந்திரனை அடைவதில் ரஷ்யரும் அமெரிக்கரும் பல வருடங்களாக போட்டியிட்டு வருவது எல்லோரும் அறிந்ததே. அப்பல்லோ பயணத்துக்கு முன்பே ரஷ்யா ஓர் ஆளில்லாத விண்வெளிக்கலத்தை சந்திரனுக்கு அனுப்பி அங்கு இருக்கக்கூடிய மண், கல் முதலியவற்றில் சிறிதளவை பூமிக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டு விட்டதாகவும் செய்திகளில் படிக்கிறோம் ஏற்கனவே இப் பூமியில் நிலவும் போட்டியும் பொறாமையும் சந்திரனுக்கும் போக வேண்டுமா? உலகில் இன்று பெரிய வல்லரசுகளாக விளங்கும் இவ்விரு நாடுகளும் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி தத்தளிக்கும் பின்னடைந்த நாட்டு மக்களுக்கு உதவியாக எவ்வளவோ செய்யலாமே? இங்கேயே எத்தனையோ ஆக்கவேலைகள் இருக்கக்கூடியதாக புதிதாக ஒரு மண்டலத்தை கைப்பற்றி அங்கேயும் போட்டிபூசல்களை உண்டாக்குவது முறையா? உலகத்தில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் விரும்பும் எவரும் இக் கேள்விகளைக் கேட்பது இயற்கை தானே?

## பரிசுபெறுபவர்

மேற்படி கடிதத்தை எழுதி பரிசு பெறுபவர்;- திரு. ஏ. உலகநாதன், நந்தாவில் கொக்குவில்.

## அடுத்தபோட்டி

இலங்கையிலோ பிறநாடுகளிலோ தற்சமயம்நிலவும் ஏதாவதொரு பிரச்னையை எடுத்துக்கொண்டு 150 சொற்களுக்கு மேற்படாத கருத்துப்பொதிந்த ஒரு கடிதத்தை எமக்கு எழுதுங்கள் பார்க்கலாம்.

## நிபந்தனைகள்

கடிதத்துடன் கீழ்தரப்படும் கூப்பனையும் கத்தரித்து எடுத்து அதில் உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சேர்த்து அனுப்ப வேண்டும். அனுப்பும் விலாசம் **கடிதப்போட்டி (2) 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** கடிதங்களை நேரடியாக ஈழநாடு காரியாலயத்திலும்சமர்ப்பிக்கலாம். எத்தனை கடிதங்களையும் ஒருவர் ஒரே தபால் உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றோடும் ஒரு கூப்பன் சேர்க்கப்படவேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. சிறந்த கடிதத்துக்கு ரூபா மூன்று பரிசு வழங்கப்படும். பாராட்டுக்குரியவை 'ஈழநாடு' தினப்பதிப்பில் தொடர்ந்து வெளியிடப்படும். கடிதங்கள் 21-7-69 க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும்.

**'ஈழநாடு'**

**கடிதப் போட்டி (2)**

பெயர் : ....................................

விலாசம் : ....................................

....................................


கடமையாற்றினர்.

# கட்டுக் குலையாத மேனி வனப்பின் இரகசியம்



கடைந்தெடுத்த சிலை போன்று கட்டுக்குலையாத மேனி வனப்புடன் திகழ்வதற்குப் பண்டைக் காலக் கீழ்த்திசை மங்கையர் சந்தனத்தைக் குழைத்துச் சருமத்திற் பூசி வந்தனர். அதே சந்தனத்தின் அருங்குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றது தூய மைசூர் சந்தன எண்ணெய் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ராணி சந்தன சோப்.

**ராணி**

**சந்தன சோப்**

-அழகு சோப்புகளின் ராணி; அழகு ராணிகளின் பிரிய சோப்.







**ராணி**

**சந்தன சோப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திர பிரயாண வெற்றியில் யு. எஸ். வீரர்கள் நம்பிக்கை

கென்னடி முனை, ஜூலை 16

**இன்று மாலை ஆரம்பமாகும் சந்திரப்பயணம் வெற்றிகரமாக முடியுமென்பதில் அப்பல்லோ—11 வீரர்கள் மூவரும் முழு நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.**

இந்த நூற்றாண்டில் மனிதன் மேற்கொள்ளும் மிகவும் பரபரப்பும் துணிச்சல் மிக்கதுமான சாகசச்செயல் என்று கருதப்படும் இந்தச் சந்திரப்பயணத்தைப் பார்ப்பதற்கு கென்னடிமுனையில் பத்து லட்சத்துக்குமதிகமான மக்கள் கூடியிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியைப் பார்த்து உலகம் முழுவதற்கும் செய்திகள் அனுப்புவதற்காக பல்லாயிரக்கணக்கான நிருபர்கள் வந்திருக்கிறார்கள்.

இன்னும் நான்கு நாட்களில் சந்திரனில் மனிதன் இறங்குவதற்கான முயற்சியின் ஆரம்பக்கட்டத்தைப் பார்ப்பதற்கு வந்திருக்கும் முக்கிய பிரமுகர்களில் முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோன்சனும் ஒருவர்.

சுமார் ஆயிரத்துக்குமதிகமான தொழில் நுட்ப நிபுணர்கள், அப்பல்லோ—11 கலத்தையும், அதனைச் செலுத்துவதற்கான 'சட்டர்ஸ்' ஏவுகணையையும் இறுதியாக பரிசோதிப்பதில் முழுமூச்சுடனீடுபட்டிருக்குமதேவேளையில் விண்வெளி வீரர் மூவரும் நேற்று ஓய்வெடுத்துக் கொண்டார்கள். விண்வெளிக்குப் புறப்படும் கடைசிநேரம் வரையில் பயிற்சியிலீடுபடுவதால் ஓய்வில்லாமல் போவதாக முன்பு விண்வெளிக்குச் சென்ற வீரர்கள் குறைகூறியதன் காரணமாகவே இவர்களுக்கு நேற்றுப்பூரண ஓய்வுகொடுக்கப்பட்டது.

சந்திரனில் நீல் அம்ஸ்ட்ரோங்கும், எட்வின் ஆல்டிரினும் இறங்கும்போது சந்திரனைச் சுற்றிவலம்வந்து கொண்டிருக்கப்போகும் மைக்கல் கொல்வின்ஸ் நாம் கடற்கரையில் ஓய்வெடுக்கப்போவதாகவும் சந்திரப் பயணத்திட்டத்தைமீண்டும் படிக்கப்போவதாகவும் கூறியிருந்தார்.

சந்திரனில் 'ஈகிள்' கலம் இறங்கும்போது கோடிக் கணக்கான மக்கள் பூமியில் அந்த நிகழ்ச்சியை டெலிவிஷனில் பார்ப்பார்கள். ஆனால் சந்திரனை வலம் வந்துகொண்டிருக்கப் போகும் கொலின் மாத்திரம் அதனைப் பார்க்கமாட்டார். அவர் பிரயாணம் செய்யும் 'கொலம்பியா' கலத்தில் டெலிவிஷன் இருக்காது என்பதே இதற்குக் காரணம். சந்திரனில் மனிதன் இறங்கும் நிகழ்ச்சியை பார்க்க இயலாதுபோகும் அமெரிக்கர்களில் தானும் ஒருவனாய் இருக்கப்போவது பற்றி கொலின்ஸ் கவலை தெரிவித்துள்ளார்.

### ரஷ்ய கலம்

சோவியத் யூனியன் அனுப்பியுள்ள லூனா 15 ஆளில்லா விண்கலம் நாளைய தினம் சந்திரனைப் போய் அடையுமென்று கருதப்படுகின்றது.

# பத்திரிகை சுதந்திரத்துக்கு உழைப்போருக்கு பரிசு

லண்டன், ஜூலை 16

சாம்ராஜ்ய நல்லெண்ணத்திற்கு அல்லது பத்திரிகைச் சுதந்திரத்திற்குக் குறிப்பிடத்தக்க வகையில் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு அடுத்த ஆண்டிலிருந்து வருடாந்தம் பரிசு வழங்க சாம்ராஜ்யப் பத்திரிகையாளர் சங்கம் தீர்மானித்திருக்கிறது. சாம்ராஜ்யப் பத்திரிகை உலகிற்கு அஸ்டர்பிரவுவின் குடும்பத்தினர் செய்துள்ள சேவையைக் கௌரவிக்கும் வகையில் இவை 'அஸ்டர் பரிசுகள்' என அழைக்கப்படும்.

சாம்ராஜ்யப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக இம்முறையும் அஸ்டர் பிரபு தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். 1929ம் ஆண்டிலிருந்து இவர் இப்பதவியை வகித்துவருகிறார். இவரது புத்திரரான கௌரவ கவின் அஸ்டர் 1959ம் ஆண்டிலிருந்து சாம்ராஜ்ய பத்திரிகையாளர் சங்கத்தின் கவுன்சிலுக்கு அக்கிராசனராகக் கடமையாற்றிவருகிறார்.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற சாம்ராஜ்யப் பத்திரிகையாளர் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டின்போதே இப்பரிசுத் திட்டம் அறிவிக்கப்பட்டது பிரிட்டிஷ் வெளிவிவகார, சாம்ராஜ்ய ராஜாங்க மந்திரி செப்பேர்ட் பிரபு இம் மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் சாம்ராஜ்யத்தில் அங்கம் வகிக்கும் ஜனநாயக நாடுகளின் பத்திரிகைத் தரத்தை வெகுவாகப் பாராட்டினார். ஜனநாயக ஆட்சிமுறை சிறப்பெய்வதில் பத்திரிகைகள் முக்கிய பங்குவகிக்கிறதென்பதை விளக்கிய அமைச்சர் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டிக்காக்க, பத்திரிகைகளை போராடவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

# 'கல்லூரியின் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவர்'

அளவெட்டி, புதன்

'இக்கல்லூரி அதிபர் இக்கல்லூரியின் வரலாற்றில் முக்கிய பங்கு பெற்றவர். மாணவனாகவும், ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் இக்கல்லூரியிலே கடமையாற்றியுள்ளார். இப்படிப்பட்ட சந்தர்ப்பம் இலங்கையில் வேறு எவருக்கும் கிடைத்திருக்காது. கிடைப்பினும் உப அதிபர்வரைதான் கிடைக்கும். அதற்குமேல் இல்லை. இங்கே எமது அதிபர் திரு. சுப்பிரமணியம் தமது நிர்வாகத் திறமையால் தான் படித்த, படிப்பித்த, துணை அதிபராயிருந்த அதே கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றுகிறார்.'

இவ்வாறு [illegible] ரான இலி[illegible] யாலய அதிபர் டி. டி, நாண [illegible]

சிறந்த காரணம் ஒன்று உண்டு. நான் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவன் - தமிழ் மாணவன். அதுதான் இக்காட்சியைத் திறந்து வைக்கும் பேற்றை எனக்குத் தந்தது என நினைக்கிறேன்.

## ரூபா 75000 ஜவுளிகள் பிடிபட்டன

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறை இராணுவத்தினர் பொலிகண்டி கடற்கரையில் வைத்து ரூபா 75,000 பெறுமதியான 11 மூடைகள் கொண்ட ஜவுளிகள் வாசனைத் திரவியங்களை கைப்பற்றினர்.

பொருட்கள் யாவும் சுங்க

மத்திய அமெரிக்காவிலுள்ள

# எல்சல்வடோர் - ஹொன்டுரஸ் படைகள் தொடர்ந்து மோதல்

## அமைதியை நிலைநாட்ட யு. எஸ் குழு போகிறது

வாஷிங்டன், ஜூலை 16

மத்திய அமெரிக்க குடியரசு நாடுகளான எல்சல்வடோர் படைகளுக்கும் ஹொன்டூரஸ் படைகளுக்கும் நேற்று இரவு ஆரம்பமான சண்டைகள் தொடர்ந்து நடைபெறுவதாக செய்திகள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த இரு நாடுகளுக்குமிடையிலான சண்டையை [illegible] பட்டுப்போய்க்கொண்டிருக்கின்றது. சண்டையை நிறுத்தும்படி இருநாடுகளையும் அமெரிக்கா அவசரமாகக் கேட்டிருக்கின்றது. இந்த நாடுகளுக்குமிடையில் பல வருடங்களாக எல்லைத்தகராறு இருந்து வருகின்றது. உதை பந்தாட்டத்துக்கான உலக 'கப்' போட்டி சமபந்தமாக ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து இரு

நேற்றிரவு எல்சல்வடோர் துருப்புகள் ஆகாய மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் பெருமளவில் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருப்பதாக ஹொன்டூரஸ் குற்றஞ்சாட்டியது. ஹொன்டூரஸில் இருக்கும் சுமார் 11,000 எல்சல்வடோரியர்களையும் அந்த நாட்டைவிட்டு ஓட்டுவதற்காக முறையற்றநடவடிக்கை எடு

தி. மு. க. பொதுச் செயலாளர் பதவி

# ஆட்சித்தலைவரிடமேகட்சித் தலைமை இருக்க வேண்டும்

## எம். ஜி. ஆர். விளக்கம்

சென்னை, ஜூலை 16

தமிழ்நாடு திராவிடமுன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் பதவிக்கான போட்டியில் திரு கருணாநிதியை எம். ஜி. ஆர். ஆதரிக்கிறார்.

எம். ஜி. ஆர். நிருபர்களுக்களித்துள்ள பேட்டியில், கட்சித் தலைமையும் ஆட்சித்தலைமையும் ஒருவரிடம்தான் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எம். ஜி. ஆர். கூறியதாவது:

''இப்போது தி. மு. க கழகத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமை ஓர் அசாதாரணமான நிலைமை என்று நான் கருதுகிறேன். சில வாரங்களுக்கு முன்பு சென்னை ராயப்பேட்டையிலுள்ள ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது முதலமைச்சர்தான்பொதுச் செயலாளராக இருக்கவேண்டும் என்றும் அப்படி முதல் அமைச்சர் பொதுச்செயலாளராக இருப்பதுதான் நாட்டுக்கும் கட்சிக்கும் நன்மைபயக்கும்'' என்று கூறினேன்.

அன்று அது என் சொந்தக் கருத்து. அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள எந்த ஒரு காரணமும் இதுவரை ஏற்படவில்லை.

தி. மு. கழகம் ஓர் அரசியல் ஸ்தாபனம், இது ஜனநாயகஅடிப்படையில் இயங்கிவருகிறது.

ஜனநாயகஅடிப்படையில் இயங்கும் எந்த அரசியல் ஸ்தாபனத்திலும் போட்டி என்பது இருக்கத்தான்செய்யும். போட்டியைத் தடுக்க முடியாது.

இப்போதும் தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் பலர் பல மாவட்டங்களில்போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். அதையெல்லாம் நாம் கவனித்துத்தான் வருகிறோம். இப்படி ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டஉறுப்பினர்களை போட்டியிட வேண்டாம் என்றும் அல்லது தங்கள் விருப்பத்திற்கு இணங்க ஒருவரை தேர்ந்தெடுக்கும் உரிமையை இழந்துவிடவேண்டும் என்றும் கூறமுடியாது.

கழகத்திற்குள் போட்டி போடுவதால் கழகம் சீர்குலைந்துவிடும் என்று சிலர் சொல்கிறார்கள். போட்டி ஏற்படுவதால் கழகம் சீர்குலைந்துவிடும் என்று சொல்வதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

கழகத்தின் வலுவும் கழகத்தைக் கட்டிக்காக்கும் திறனும் கழகத்திற்கு ஆணிவேராக இருந்துவரும் தொண்டர்கள் கையில்தான் இருக்கிறது.

கழகத் தலைவர்கள் கழகத்தைக் கட்டிக்காக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தொண்டர்களை வழிநடத்திச்செல்லவேண்டும்.

இந்நிலையில் போட்டியிட்டால் கழகம் சீர்குலைந்துவிடும் என்று பேசும் தலைவர்கள் சாதாரண உறுப்பினர்களின் தகுதியையும் திறமையையும் கொள்கைபற்றையும் தப்பாகக் கணக்கிட்டுகொண்டு தங்களின் கட்சிக்குள் பலவீனத்தைத் தான் காட்டிக்கொள்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

ஒரு கட்சி எப்படி பலம் வாய்ந்ததாக இருக்கும் என்றால், அடிப்படையிலேயே ஒழுங்கு கட்டுப்பாடு ஆகியவைகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

கட்சியில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டி கட்சியைக் கட்டிக்காக்கும்வகையில் தலைவர்கள் கட்சியை காப்பாற்றித் தரவேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்,

அன்று ஒரு நாள் அண்ணா சொன்னது என் நினைவைத் தொடுகிறது.

### அணைந்துபோகாமல் காப்பாற்றவேண்டும்

தீயை அணைந்து போகாமல் காப்பாற்ற வேண்டும் என்றார். அதுபோல் தி. மு. க. என்ற கட்சியையும் சீர்குலையாமல் காப்பாற்ற வேண்டும்.

அடிப்படையில் போட்டி ஏற்பட்டு கட்சியில் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதனால் கட்சி சீர்குலைந்துவிடவில்லை.

அப்படியானால் தலைவர்கள் மட்டத்தில் நடக்கும் போட்டியால் மட்டும் கட்சி சீர்குலைந்து விடுமா? அப்படி போங்டியிட்டு கட்சியை உடைப்பேன் என்று யாராவது கூறுவார்களானால் அது ஒரு மிரட்டுதலாக அச்சுறுத்தலாகத்தான் இருக்கும். அதையன்றி வேறில்லை.

### பொருளாளர்

நான் கூட பொருளாளர் பதவிக்கு போட்டியிட்டு பலப்பரீட்சை பார்க்கவேண்டும் என்று விரும்புபவன் அல்ல.

போட்டியிடுவது என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டால் அதில் வெற்றி பெற்றாலும் தோல்வியுற்றாலும் அதை ஜனநாயக அடிப்படையில் ஏற்றுக்கொள்வேன்.

### கட்சித்தலைமை

கட்சி தலைமையும் ஆட்சித் தலைமையும் ஒருவரிடம்தான் இருக்கவேண்டும் என்பதுதான் என் விருப்பம். இதனால்தான் முதல் அமைச்சர் பொதுச்செயலாளராக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

கட்சித் தலைமையும் ஆட்சித் தலைமையும் வெவ்வேறாக இருந்த காரணத்தால் தான் காங்கிரஸ் கட்சி இந்த அளவுக்கு சீர்குலைந்து போய்விட்டது.

சாத்தூர் இடைத்தேர்தலில் சி. சுப்பிரமணியம் என்ன பேசியிருக்கிறார் பார்த்தீர்களா? ''எங்களுக்குப் போடாவிட்டால் கம்யூனிஸ்டுகளுக்குப் போடுங்கள்'' என்று எதிர்கட்சிகள் பேசுவதுபோல் பேசியிருக்கிறார்.

இந்த நிலைக்கு காங்கிரஸ் வந்துவிட்டது.

இந்த மாதிரி நிலை எதிர்காலத்தில் தி. மு. க.வுக்கு வரக்கூடாது என்பதுதான் என் எண்ணம்.

நிருபர்: நெடுஞ்செழியன்

# 'சமூக ஒற்றுமைப்பாட்டுக்கு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கும் நேற்று இரவு ஆரம்பமான சண்டைகள் தொடர்ந்து நடைபெறுவதாக செய்திகள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த இரு நாடுகளுக்குமிடையிலான சண்டையை நீக்குவதற்காக அமெரிக்க அரசாங்க பாதுகாப்பு சபைக்குழுவொன்று மத்திய அமெரிக்காவுக்குப் புறப் நாடுகளுக்குமிடையில் பல வருடங்களாக எல்லைத்தகராறு இருந்து வருகின்றது. உதை பந்தாட்டத்துக்கான உலக 'கப்' போட்டி சம்பந்தமாக ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து இரு நாடுகளும் கடந்த ஜூன் 26-ம்திகதி ராஜியத் தொடர்புகளை முறித்துக் கொண்டன.

ருப்பதாக ஹொன்டுரஸ் குற்றஞ்சாட்டியது. ஹொன்டுரஸில் இருக்கும் சுமார் 11,000 எல்சல்வடோரியர்களையும் அந்த நாட்டை விட்டு ஓட்டுவதற்காக முறையற்றநடவடிக்கை எடுக்கப்படுவதாக எல்சல்வடோர் ஹொன்டுரஸ்மீது குற்றம்சாட்டியுள்ளது.

அதிபராயிருந்த அதே கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றுகிறார்.'

இவ்வாறு சிங்கள அறிஞரான இலிம்பே மகாவித்தியாலய அதிபர் டி. டி, நாணயக்கார சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பொருட்காட்சி விழாவைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

'என்னை இக்காட்சியைத் திறந்துவைக்கும்படி கேட்டதற்குத் தக்க நியாயமுண்டு. முதலாவது நியாயம் சிங்களவனுகிய நான் தமிழ் மொழியில் அளவற்ற ஆர்வம் கொண்டிருக்கிறேன். தமிழ் மொழியை எனது மனநிறைவுக்காக விரும்பிப் படிக்கிறேன். தமிழ் மக்களுடன் அளவளாவி வாழ விரும்புகிறேன். இந்தத் தொடர்பு காரணமாக நான் தமிழ்மக்களிடத்தில் கலந்துகொள்வது நியாயம். அதைவிடச்

ஞுவத்தினர் பொலிகண்டி கடற்கரையில் வைத்து ரூபா 75,000 பெறுமதியான 11 மூடைகள் கொண்ட ஐவுளிகள் வாசனைத் திரவியங்களை கைப்பற்றினர்.

பொருட்கள் யாவும் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

— —

## எச்சரிக்கை

கோட்டை, புதன்

சௌக்கிய இலாகாவுக்குரிய வாகனங்களை அவற்றிற்கு அதிகாரமில்லாதவர்களைச் செலுத்த அனுமதிக்கும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சௌக்கிய பகுதி அதிபர் சகல வைத்திய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் வைத்திய விசேஷ இயக்கங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் எச்சரித்துள்ளார்.

பினர்களை போட்டியிட வேண்டாம் என்றும் அல் மல் காப்பாற்ற வேண்டும் என்றார். அதுபோல் தி. மு.

வந்துவிட்டது.

இந்த மாதிரி நிலை எதிர்காலத்தில் தி. மு. க.வுக்கு வரக்கூடாது என்பதுதான் என் எண்ணம்.

நிருபர்: நெடுஞ்செழியன் தனக்கு ஆதரவு திரட்ட எல்லா மாவட்டங்களுக்கும் செல்லப்போவதாகக் கூறி இருக்கிறரே அதுபோல் நீங்களும் போவீர்களா?

எம். ஜி. ஆர்.: நாவலர் போன்றவர்கள் இனித்தான் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு தமக்கு ஆதரவு திரட்டப்போவதாக நான் கற்பனை செய்துகொள்ளத் தயாராக இல்லை. அப்படிப்பட்ட நாவலர் ஏன் இபபடிப்பட்ட பயணத்தை மேற்கொள்ள எண்ணுகிறர் என்று எனக்கு புரியவில்லை.

அதுபோல நானும் "நான்தான் எம். ஜி. ராமச்சந்திரன். நான்தான் பொருளாளர் பதவிக்குப் போட்டி போடுகிறேன். எனக்கு ஆத

(4-ம் பக்கம் பார்க்க)

# 'சமூக ஒற்றுமைப்பாட்டுக்கு இராமாயணம் ஒருவழிகாட்டி'

கோட்டை, புதன்

'இன்று எமக்கிடையேயுள்ள சமூகப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதற்கு வழிகாட்டியாக அமைகிறது இராமகாதை. மூன்று சகோதரர்களோடு பிறந்த இராமன் அரச குடும்பத்தில் பிறந்தவனுகவிருந்தும் அந்தஸ்தில் ஜாதியில் குறைந்தவர்களான குகன், சுக்கிரீவன் விபீஷணன் ஆகிய மூவரையும் சகோதரர்களாக ஏற்றுக் கொண்டான். இது ஜாதி, இனம் நாடு ஆகியவை மனித ஒற்றுமையை பிரிக்க முடியாது என்பதைக் காட்டுகிறது'.

இவ்வாறு விவேகானந்த சபைமண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய திரு லக்ஷ்மமணன் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் "இராமன் தன் சகோதர்களாகக் கொண்டு கருணை செய்தவர்களோ ஒரு வேடன், ஒரு குரங்கு, ஒருராக்ஷசன் இவர்களை இராமர் சேர்த்துக் கொண்டதை கம்பன் விளக்கிக் கூறுகையில் சமூக ஏற்றத்தாழ்வுகளை அறவே ஒழித்து அன்பு, கருணையாகியவற்றின் அடிப்படையில் மனித சமுதாயத்தையுருவாக்க வேண்டும் என்பது தெளிவாகிறது" என்று கூறினுர்கள்.

# இலங்கை வரவிருக்கும் பிரிட்டிஷ் ஆசிரியகுழு

லண்டன், ஜூலை 15

இங்கிலாந்திலுள்ள சர்வகலாசாலைகள், கல்லூரிகள், பாடசாலைகளைச் சேர்ந்த 80 விரிவுரையாளர்கள், ஆசிரியர்களைக்கொண்ட கோஷ்டி ஒன்று இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருக்கிறது. தற்சமயம் தென்னிந்தியாவில் ஆய்வுச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கும் இப்போதனுசிரியர்கள் ஜூலை 29ந் திகதி இலங்கை வருவார்கள். ஆகஸ்ட் மாதம் 24ந் திகதிவரை இவர்கள் இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

பிரிட்டிஷ் ஆசிரிய குழுவின் வெளிநாட்டு ஆராய்ச்சிச் சுற்றுலாவைச் சாம்ராஜ்ய நிறுவனம் ஒழுங்கு செய்திருக்கிறது. 1967ம் ஆண்டு இதுபோன்ற ஓர் ஆய்வுச் சுற்றுலாவில் 90 பிரிட்டிஷ் ஆசிரியர்கள் கென்யா, தங்ஸானியா, உகண்டா போன்ற ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயஞ் செய்தனர். இந்திய உபகண்டம் பற்றி அறிந்து கொள்ள பிரிட்டிஷ்புவியியல் ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிப்பதே இம்முறைச் சுற்றுலாவின் நோக்கமாகும். தென் இந்தியாவில் இவர்கள் பங்களூர், மைசூர், உதகமண்டலம், கொச்சி, மதுரை போன்ற பிரதான நகரங்களுக்கு இப்பொழுது சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபட்டிருப்பார்கள்.

ஜூலை 29ந் திகதி தென்னகத்திலிருந்து இவ்வாசிரியர்கள் கோஷ்டி இலங்கை வருகிறது. இலங்கையில் யாழ்ப்பாணம், அநுராதபுரம் கொழும்பு போன்ற நகரங்களுக்கு இவர்கள் விஜயஞ்செய்வார்கள் நகரப் புறங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்களது வாழ்க்கைமுறை பற்றி விபரமாக இவர்கள் படித்தறிவார்கள்.

# இறந்தவர் தொகை 82

கட்டாக், ஜூலை 16

ஒரிஸ்ஸாவில் நேற்று இரவு ரயில் விபத்தில் மரணமானவர்களின் தொகை எண்பத்தி இரண்டாக அதிகரித்துள்ளது. இவர்களில் 6 பேர் ரயில்வே ஊழியர்கள். 87 பேர் காயமடைந்ததாக உத்தியோகபூர்வமான செய்திகள் கூறுகின்றன.

—

விதை உருளைக்கிழங்கு

# பற்றுக்குறை இராது

காப்பாய், புதன்

விதை உருளைக்கிழங்கு இறக்குமதி சம்பந்தமாக யாழ்ப்பாண விவசாயிகள் மத்தியில் நிலவிவந்த பற்றுக்குறைப் பிரச்னை கோப்பாய்க் கிராமசபைத்தலைவர் திரு. தி. பரமானந்தராசாவின் தலையீட்டினுல் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் விதை உருளைக்கிழங்கு யாழ். மாவட்ட விவசாயிகளுக்குக் குறைந்த அளவே வழங்குவதென முடிவுசெய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. இது சம்பந்தமாக திரு. பரமானந்தராசா, யாழ்ப்பாண எம். பி. மூலமாக உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டாவுடன் தொடர்பு கொண்டதன் பயனுக அமைச்சர் சென்ற ஆண்டு போல இவ்வருடமும் விதை உருளைக்கிழங்கு விநியோகிக்க உறுதியளித்துள்ளாரெனத் தெரியவருகிறது

# காலம்தாழ்த்தாது நியமிக்குக'

யாழ்ப்பாணம், வியா.

வவனிக்குளம், துணுக்காய் உபதபால் நிலையங்களுக்கு மேலதிக தபால் சேவகர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டு இன்னும் தபால் சேவர் நியமிக்கப்படாததை போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் கவனத்துக்கு கிளிநொச்சி எம். பி. கொண்டுவந்து, காலம்தாழ்த்தாது நியமிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

டாக்டர் ஜாரிங்

# அமைதி முயற்சியை தொடரக்கோரிக்கை

டெல் அவிவ், ஜூலை 16

மேற்காஸியாவில் அமைதி ஏற்படுத்தும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் படி இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் திரு. அபா எபான் ஐ. நா. அதிகாரி டாக்டர் குனுர் ஜாரிங்கைக் கேட்டுக்கொண்டிருக்கிறுர்.

டாக்டர் ஜாரிங்குடன் திரு. எபான் நடத்திய ஆலோசனைகளின் பின்னர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இஸ்ரேலுக்குள் ஊடுருவி மிகப்பெரிய 'காஸ்' குழாய்களைத் தகர்த்துவிட்டதாக அரபுக் கொமாண்டோக்கள் அறிவித்துள்ளன.

# இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், வியா.

கண்வைத்திய நிபுணர் டாக்டர் எஸ் ஆனந்தராசா கொழும்புத்துறை சனசமூக நிலைய வாசிகசாலையின் வேண்டுகோளுக்கிணங்க அடுத்தமாதம் 1-ம் திகதி கொழும்புத்துறையில் ஏழை மக்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை நடத்தவிருக்கிறுர்.

சிகிச்சைபெற விரும்புவோர் அங்குள்ள கொழும்புத்துறை சனசமூகநிலையச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கிலியன்தோப்பை மீண்டும் பாதுகாக்கவேண்டும்

# போர்த்துக்கீசர் வருகையால் எமது சமய, கல்வி, கலை, கலாச்சார வளர்ச்சி ஸ்தம்பித்தது

### மாநகர சபையில் திரு. சிவசுப்பிரமணியம் உரை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணமன்னர்களின் புராதன இராசதானியாக 1478-ம் ஆண்டு தொடக்கம் 1621ம் ஆண்டுவரை விளங்கிய நல்லூர் சங்கிலியன் தோப்பை மீண்டும் புதுப்பித்து பண்டைப் பெருமைக்குப் புத்துயிரூட்டப் பாதுகாக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானத்தை நேற்றைய யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்த 23ம் வட்டார அங்கத்தவரான திரு. வி. சிவசுப்பிரமணியம் அதனைத் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

16ம், 17ம் நூற்றுண்டுகளில் இலங்கையில் மூன்று பெரிய அரசுகள் காணப்பட்டன. கோட்டை, கண்டி, யாழ்ப்பாண இராச்சியங்களே அவையாகும். அந்தக் காலம் எமது அரசர்கள் எம்மை வலிமையுடன் ஆண்டகாலம். யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக நல்லூர் விளங்கியது. அதன் இராசதானியாக சங்கிலியன் தோப்பிலிருந்து பரராசசேகரன் செகராசசேகரன், எதிர்மன்னசிங்கன், சங்கிலியன் ஆகிய அரசர்கள் முறையே இராச்சிய பரிபாலனம் செய்துவரும் காலத்திலே போர்த்துகீசர் வியாபாரத்திற்காக இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். அந்தக் காலத்திலே அவர்கள் எமது அரசர்களின் படைப்பலக் குறையை அறிந்து நம் நாட்டையே கைப்பற்றிவிட ஆசை கொண்டனர்.

அவர்கள் வருகையால் எமது சமயம், கல்வி, கலைகள், கலாச்சாரம் எல்லாவற்றின் வளர்ச்சியும் ஸ்தம்பித்துவிட்டது. அன்று தொட்ட பறங்கி நோய் இன்றும் நம்மைவிட்டு அகலவில்லை எனக் கூறின் மிகையாகாது.

எமது யாழ்ப்ாணஅரசர்கள் சிலகாலம் போர்த்கீசரின் அனுசரணையுடன் தான் ஆட்சி புரிந்து வந்தனர். ஈற்றில் 1591ல் நல்லூர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதில் ஒரு அம்சம் போத்துக்கல் அரசனை தங்கள் அரசனுக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை வீறுகொண்டு எதிர்த்தவன் எமது கடைசிச் சங்கிலி மன்னனே. எம்மன்னன் தஞ்சாவூர் நாயக்கமன்னனுடைய உதவியையும் கண்டியரசன் செனரத்தினது உதவியையும் கோரினுன். உதவி வந்து சேருமுன் 'அரசன் வெளி' என்ற இடத்தில் பெரும்போர் மூண்டது. அன்னியனின் துப்பாக்கி பீரங்கிப் படைகளின்முன் எம் மன்னனும் சேனையும் வாளும் வேலும் தாங்கி பின் வாங்காது போர் புரிந்தனர். ஈற்றில் சங்கிலியன்தோப்பில் கடைசி யுத்தம் நடந்தது. தஞ்சைநாயக்கர் படைகளும் இப்போரில் கலந்து கொண்டன. போர்த்துக்கீசரால் சங்கியலின் தோப்பு முற்றுகையிடப்பட்டது. ஆலயங்கள், அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள் எல்லாம் போர்த்துக்கீச பீரங்கிப் படைகளால் சின்னுபின்னமாக்கப் பட்டது. புவனேகபாகுவால் புதுப்பிக்கப்பட்ட கந்தசாமி கோவில் கொந்தாலி பிக்காலுல் தகர்க்கப்பட்டு தரைமட்டமாக்கப் பட்டது. அவ் ஆலயத்திலிருந்த தாமரைக் கற்கள் எமது யாழ்ப்பாணக் கோட்டையில் இன்றும் காணப்படுகின்றன.

இந்தக் இக்கட்டான நிலையிலும் சங்கிலி மன்னன் நல்லூர் உடன்படிக்கையை ஏற்க மறுத்துவிட்டான். போர்த்துக்கீச தளபதி 'ஒலிவியாரா' சங்கிலி மன்னனையும் அவனது குடும்பத்தாரையும் கைப்பற்றினுன். போர்த்துக்கீச தளபதி எம் மன்னனையும் தேவியையும் கைதியாகக் கொழும்புக்கு கொண்டு சென்று அங்கிருந்து கோவைக்கு அவர்களை அனுப்பினுன். நல்லூர் உடன்படிக்கையை ஏற்காத குற்றத்திற்காகவும், கிறிஸ்தவ சமயத்தை ஆதரிக்காததற்காகவும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

அலபண்டேகா என்னும் சந்தை வீதி வழியே சங்கிலி மன்னனைச் சிரச்சேதம் செய்து கொண்டு சென்றனர். அங்கு இரத்தினக்கம்பளத்தின் நடுவே ஒரு சிவந்த பட்டுமெத்தை ஒன்றிட்டு அதன்மேல் எமது அரசன் சங்கிலியனை வைத்து சிரம் கொய்யப்பட்டது எனவும், சங்கிலியன் சிரச்சேதமடையுமுன்னர் தன் கைகளைப் பின்கட்டாகக் கட்ட விடுதல் தன் வீரத்துக்கும் தன் தமிழ்த் தாய்க்கும் ஈனலனை மறுத்துத் துணிவோடு தண்டனையை ஏற்று வீரசுவர்க்கம் எய்தினர். இத்துடன் யாழ்ப்பாண அரசும் முடிவுற்றது.

எமது அரசு முடிவுற்று 350 வருட காலமாகியும் நல்லூர் சங்கிலியன் அரண்மனை வாசல் கட்டடமும் ஜமுனு தீர்த்தமும், நாலு திக்கிலும் அமைக்கப்பட்ட கோவில்களும் சோலைகளும் இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

புராதன இராசதானியான சங்கிலியன்தோப்பு இன்று பலவகைத்தொழில் புரியுமிடமாகவும் தேநீர் கடைகளாகவும் கள்ளுக் கொட்டில்களாகவும் இருக்கின்றது.

தமிழ்ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தமது கட்சிபேதங்களை மறந்து முழுமனதுடன் பிரதமரைச் சந்தித்து வருகின்ற தேர்தலுக்கு முன் சங்கிலியன்தோப்பை மீண்டும் புதுப்பித்து பண்டைப் பெருமைக்குப் பாதுகாப்பளிக்க முன்வரல்வேண்டும்.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

புத்தகம் படிப்பதினின்று ஞானம்வராது. அதுவாகவே மனம் உள்ளத்தில் தோன்றவேண்டும். நூல்களைப் படிப்பது ஓரளவு உதவும். அவ்வளவோ சிலசமயம் படிப்பானது ஞானம் உதயமாவதற்குத்தடையாகவும் இருக்கும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம்
2ந் திகதி (17-7-69)


## கல்விக் குழப்பம்

நமதுநாட்டின் கல்வி முறையில் குழப்பங்களும்சிக்கல்களும் ஏற்பட்டு கல்வித் தரம் மிகமிகக் குறைந்து கல்வித்துறையே சீர்கெட்டிருப்பதற்கு அரசியல் வாதிகளிடமே கல்வித்திட்டம் ஒப்படைக்கப்பட்டிருப்பதுதான் காரணமென்றும் கல்வி முறை சீராக வேண்டுமெனில் கல்வி நிபுணர்களைக்கொண்ட குழு ஒன்றிடம் கல்வித்திட்டப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் உபசபாநாயகரும் உடுப்பிட்டிப்பிரதிநிதியுமான திரு. மு. சிவசிதம்பரம் நல்லதொரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் எழுபத்தைந்தாவது ஆண்டு விழாவில் பேசுகையில் அவர் தெரிவித்த இந்தயோசனையை இன்றைய கல்விஅமைச்சர் ஏற்றுக்கொள்வாரென்று எதிர்பார்க்க முடியாது ஆயினும் நாட்டில் நல்ல கல்வி முறை ஏற்படவேண்டுமென்றும் எதிர்காலத்தில் நல்லபிரஜைகளை உருவாக்கவேண்டுமென்றும் விரும்பும் நல்லெண்ணம் படைத்த அனைவரும் உபசபாநாயகரின் இந்த யோசனையை நிச்சயம் வரவேற்பர்.

'அரசியல் வாதி அடுத்த தேர்தலைப்பற்றியே சிந்திப்பான்; அரசியல் ஞானியோ அடுத்த சந்ததியைப் பற்றிச் சிந்திப்பான்' என்று ஓர் அறிஞர் தெரிவித்தகருத்து நமது நாட்டைப்பொறுத்தவரையில் வெகு பொருத்தமாகஅமைந்திருக்கிறது. நமது இன்றைய கல்வி அமைச்சர் எப்பொழுதும் ஏதாவது சர்ச்சையில் இறங்கி, அவர் அமைச்சராகப்பதவியேற்றகாலம்தொடக்கம் இன்றுவரை பத்திரிகைகளில் என்றும் இடம்பெற்று மக்கள் மறக்காதவாறு ஒரு சாதனையை நிலைநாட்டியிருப்பதைத்தவிர கல்வியின்முன்னேற்றத்திலோ நாட்டின்அபிவிருத்தியிலோ அவர் வேறு எந்தச் சாதனையையும் நிகழ்த்தியதாகத் தெரியவில்லை. வடபகுதியிலுள்ள கல்லூரிகளில் விஞ்ஞான கூடங்கள் இக்கொண்டதை யாரும் மறந்துவிட மாட்டார்கள். இதன் மூலம் அவர் அடுத்த தேர்தலைப் பற்றியே சிந்திக்கும் ஓர் அரசியல்வாதிதான்என்பதையும் நிரூபித்துவந்தார். வடபகுதியில்பாடசாலைகளும், கல்லூரிகளும் எப்படி உருவாயின, விஞ்ஞான கூடங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு மாணவர், ஆசிரியர், பெற்றோர் மற்றும் பொதுமக்களின்உழைப்பினாலும் உதவியினாலும்உருவாக்கப்பட்டன வென்பதையும் கல்விக்கு வடபகுதி மக்கள் தீர்க்கதரிசனத்துடன் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்களென்பதையும் இன்றைய கல்விஅமைச்சர் மட்டுமல்ல இதற்குமுன்னிருந்த கல்வி அமைச்சர்களும்கூட அறிந்திருக்கவில்லையோ, அறிந்தும் அறியாதவர்களாக அடுத்ததேர்தல் வெற்றியைக் கருத்தில் கொண்டு நடந்துகொண்டார்களோ தெரியவில்லை.

எது எப்படியிருப்பினும் நாடு அரசியல்விடுதலை பெற்ற பின்னர் நமது நாட்டின் சூழ்நிலைக்கும் தேவைகளுக்கும் ஏற்ற கல்வி முறையைக் கொண்டு வருவதற்கு ஏதேதோ செய்வதாக, கல்வி அமைச்சராகப் பதவியேற்ற ஒவ்வொரு அரசியல் வாதிகளும் சொல்லிக்கொண்டதுடன் ஊர் ஊராகவும் நாடு நாடாகவும் சுற்றுலாசென்று வந்ததைத் தவிர உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை.

இதேசமயம் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் பற்றியும் அதைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள் பற்றியும் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும்காலம் தாழ்த்தாது இனியாவதுமுன்வரவேண்டும். பருத்தித் துறையில் 1967ம்ஆண்டுநடைபெற்ற அகில இலங்கைதமிழ் காங்கிரஸின் மகாநாட்டில் அதன் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையுரை நிகழ்த்துகையில்,

# மதியில் மனிதன் முதல் நாள்

## கிண்ணத்தால் மண்ணை ஆம்ஸ்டிரோங் அள்ளுவார்

**வரலாற்று புகழ்மிகு ஆபத்து நிறைந்த விண்வெளிப் பயணத்தை அமெரிக்க விண்வெளி வீரர்கள் ஆம்ஸ்டிரோங், எட்வின் ஈ. அல்டிரின், மைக்கல் கொலின்ஸ் ஆகிய மூவரும் ஆரம்பித்துவிட்டார்கள். அம்புலியை நோக்கி அவர்கள் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஜூலை 20-ம் திகதி இரு விண்வெளிவீரர் சந்திரனில் இறங்குவார்கள். மூன்றாவது விண்வெளி வீரரான கொலின்ஸ் மட்டும் தாய்க் கப்பலிலிருந்து அம்புலியை வளைய வந்து கொண்டிருப்பார். மனிதன் சந்திரனில் இறங்கியதும் என்ன நடக்கப்போகிறது? - இதனை விபரிக்கிறது இக்கட்டுரை.**

அப்பலோ விண்வெளிக் கப்பல் அம்புலியை வலம் வருகிறது. நெடுங்காலமாகக் காத்திருந்த வேளை நெருங்கிவிட்டது. மூன்று விண்வெளி விமானிகளும் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

அவர்களில் இருவர் பதற்றம் இன்றி நிலா வாகனத்தினுள் அமர்ந்து கொள்கிறார்கள். நிலா வாகனந்தான் தாய்க்கப்பலாகிய அப்பலோவிலிருந்து பிரிந்து நிலாவின் தரையில் இறங்க வேண்டும்.

மூன்றாவது விண்வெளி விமானி மட்டும் தனியே தாய்கப்பலில் உட்கார்ந்திருக்கிறார். பாவம் இன்னும் 22 மணிநேரத்துக்கு இவர் தனியாகத்தான் அம்புலியை சுற்றி வளையம் வந்து கொண்டிருப்பார். தாம் இருக்கும் கட்டளைப் பகுதியின் கருவிகள் அமைப்பை வெறித்துப் பார்க்கிறார்.

அதற்குள்ளாக அவர் இருக்கும் பகுதி அதிர்கிறது. ஆம் மற்ற இருவரும் இருக்கும் நிலா வாகனம் பிரிந்து கிளம்பிவிட்டது. கொடுத்து வைத்த தம் நண்பர்கள் இருவரும் இரண்டரை லட்சம் மைல்களுக்கு அப்பால் பூமியில் அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஹூஸ்டன் நகரில் விண்வெளிப் பயணத் தலைமைக் குழுவுடன் ரேடியோவில் பேசிக் கொள்வது இவர் காதில் விழுகிறது.

எல்லாம் செம்மையாக நடக்கிறது ஒற்றைத் தனி விண்வெளி விமானியுடன் கட்டளைப்பகுதி- தாய்க்கப்பல்- அம்புலியைச் சுற்றிக் கண்காணித்தபடி வலம் வருகிறது.

டம் சீரானது. திறம் வாய்ந்தது. விஞ்ஞானிகள் வடிவமைப்புப் பொறியியல் வல்லுநர்கள். விண்வெளிவிமானிகள் இவர்களெல்லாம் பல்லாண்டுகளாகச் சிந்தித்துக்கலந்துபேசிச் செய்திருக்கும் சிறப்பான திட்டம்இது.

இவர்களில் டாக்டர் டால் விண்டு ஒருவர். நிலாத் தரையில் நடக்கவேண்டிய பணிகள் பற்றிய திட்டம் உருவாக உதவியவர்களில் ஒருவர் இவர். இவர் ஒரு விஞ்ஞானிமட்டுமல்ல, விண்வெளிவிமானியுங்கூட. விஞ்ஞானிகளால் அம்புலித் திட்டத்து முதல் பயணங்களிலிருந்து நிறையப் பலன் காணவேண்டும்என்பார்கள். விண்வெளி விமானிகளால் பயணத்திட்டம் எளிமையாக இருந்தால்தான் நல்லது என்று தங்கள் ஆராய்ச்சி விமானச் சோதனைகளின் அனுபவத்தால் வற்புறுத்துவார்கள். ஆக இரு சாராருக்குமிடையே சமரசம் செய்துவைப்பவராக விளங்கியவர் டாக்டர் லிண்டு,

வெளி விமானிகள் இருவரும் இளைப்பாறுவர். உணவு கொள்வர். ஏறக்குறைய எட்டுமணி நேரம் உறங்குவர். பின்னர், நிலாத்தரையில் இறங்குவதற்குத் தயார் ஆகுவர்.

### காலைப் பொழுது

அவர்கள் ஒருதனி உடுப்பு மாட்டிக்கொண்டு தான் நிலாத் தரையில் இறங்குவர்.

நம் விண்வெளி வீரர்கள் இவ்வாறு உயிர்காக்கும் உடுப்பு மாட்டிக்கொண்டு நிலாத் தரையில் கால்வைக்கும் வேளை அங்கு காலைப் பொழுதாக இருக்கும். தகதகவென்று எரியும் கதிரவன் அடிவானத்துக்குச் சற்று உயர்வாக இருப்பான். நிழல்கள் தெளிவாகவும் கன்னங்கரேல் என்றும் இருக்கும். இது நில அமைப்புகளை அறிய உதவியாயிருக்கும்.

அங்கு அவர்கள் செய்ய வேண்டியவை எல்லாம் இங்கு பூமியில் நன்கு ஒத்

மாற்ற வேண்டுமா வேண்டாமா என்று பூமியில் இஞ்சினியர்கள் ஆராய்ந்து முடிவு செய்ய உதவும். இறங்கிய நிலாப் பகுதியில் தரையின் உறுதி, செறிவு அமைப்பு ஆகியவற்றை நில உட்கூற்றியல் விஞ்ஞானிகள் ஆராய்ந்தறியவும் உதவும்.

நிலாவாகன விமானி வாகனத்தை அடைந்து அங்கு திறந்திருக்கும் பகுதியிலிருந்து உலோகப்பெட்டி ஒன்றையும் புகைப்படக் கருவி ஒன்றையும் கைக்கருவிகள் உள்ள பெட்டி ஒன்றையும் எடுப்பார்.

உலோகப் பெட்டியில் 18 கிலோகிராம் அளவுக்கு நிலாத் தரைகல் கட்டிகளை எடுத்து வைத்துக் கொள்ளலாம் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கும்படி எடுக்க மாட்டார்கள் வகைக்குஒன்றாக எடுத்து அப் பெட்டிக்குள் தனித்தனியே மெத்தை தைத்த அறைகளில் வைக்கப்படும். ஒவ்வொன்றுக்கும் ஒரு எண் பொறிக்கப்பட்டிருக்கும். இவை ஹூஸ்டன் நகரிலுள்ள அம்புலி வரவு ஆய்வுக் கூடத்தை அடையும்வரை அடிபடாமல் பத்திரமாக இருக்கும். பெட்டியை மூடியதும் அது இறுக மூடிக்கொள்ளும். காற்று உட்புகமுடியாது. ஆகவே அம்புலியிலுள்ள சூனியச் சூழ்நிலை அப்படியே இப்பெட்டியினுள்ளும் இருக்கும்.

உலோகப் பெட்டியுடன் விமானி ஒருவாறு நடக்கிறார். 'நில வாகனத்துக்கு 15 அடி தொலைவுக்குள்ளே தான் அவர் இருக்க வேண்டும். அந்த எல்லைக்குள் காணும் பொருள்களில் நில உட்கூற்றியல் வகையில் மிக

வும் முக்கியமானவற்றை அவர் பொறுக்கி எடுத்துச் சேர்ப்பார் என்று விளக்குகிறார் டாக்டர் லிண்டு.

### நல்ல பயிற்சி


நில உட்கூற்றியல் பற்றி விண்வெளி விமானிகள் எல்லோருக்குமே நல்ல பயிற்சி உண்டு. இப் பயிற்சி இங்கே பயன்படுகிறது முக்கியமானவை என்று தோன்றும் பொருள்களை விமானி பொறுக்கி எடுக்கிறார். எடுப்பதற்கு முன் மறக்காமல் ஒவ்வொன்றையும் படம் பிடிக்கிறார்.

நிரம்பிய உலோகப் பெட்டியை கப்பியும் கயிறும் கொண்டு மேலே வாகனத்துக்குள் ஏற்றியபின் அடுத்தபடி டெலிவிஷன் புகைப்படக் கருவியை திறக்கிறார் விமானி. அடுத்த பல நிமிடங்களுக்கு உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான மக்கள் டெலிவிஷனிலே நிலாவிமானிகள் செய்கைகளையெல்லாம் அப்படி அப்படியே உடனுக்குடன் காண்பார்கள் பின்பு நிலா விமானிகள் இருவரும் இரண்டு முக்கிய பணிகளை செய்வர் ஒன்று நிலாத் தரையில் மூன்று ஆராய்ச்சி கருவிகளை அமைப்பது. அடுத்து தங்கள் வாகனத்தைச் சுற்றி 300 அடி வட்டத்துக்குள் நில உட்கூற்றியல் வகையில் முக்கியமான பொருள்களில் மாதிரிக்கு ஒன்று சேகரிப்பது.

இறுதியாக விமானிகள் இருவரும் நிலா வாகனத்தைச் சுற்றிச்சுற்றி முக்கியமான மண்வகைகள் கற்கள் உள்ளனவா என்று தேடிச் சேர்ப்பார்கள். அம்புலி எப்படி உருவாயிற்று என்றுஅறிவதற்கு விஞ்ஞானிகளுக்கு உதவக்கூடியனவாக இவை இருக்கும்.

நிலாவாகனத்தின் கதவை திறந்து தங்கள் முதுகின் மேலுள்ள உயிர்ப் பாதுகாப்புச் சுமையைக் கழற்றி வெளியே எறிந்து விட்டு உள்ளே நுழைவர். கைக் கருவிகளோடு இவையும் நிலாவில் விடப்படும்.

இனி நிலாத்தரையிலிருந்து கிளம்பவேண்டும். இந்தப் பயணம் முழுவதிலுமே இதுதான் மிகவும் நெருக்கடியான கட்டம் ஆகவே கூடுமானவரை பிசகுக்கு இடம் இல்லாதபடி இயந்திரம் எளிதாக இயக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. இறங்குவதற்குப் பயன் படுத்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாட்டிலும் நகரிலும்

அடுத்த பொதுத் தேர்தலில் தமது கட்சியான ஐக்கியதேசியக்கட்சிக்குவெற்றி ஈட்டிக்கொடுத்து நாட்டை ஒரு ஸ்திரமான நிலையில் வைத்த பின்னர் தாம் அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போவதாக நமது பிரதமர் டட்லி சேனநாயகா தெரிவித்துவிட்டார். இதுவெறும் நிருபர்களின் சரடல்ல. ஐக்கிய தேசிய கட்சி கூட்டத்திலேயே அவர் இதைக் கூறியிருப்பதால் இது உண்மையாய்த்தான் இருக்குமென்று நம்பவேண்டியிருக்கிறது.

டட்லிக்கு இன்னும் எழுபது வயதாகவில்லை, வேறு பல உலகத் தலைவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அவர் இளையவர்என்றே கூறவேண்டும். அரசியல் தலைவர்களுக்கு வயது போகப்போகத்தான் அனுபவமும் அறிவும் ஆற்றலும் அதிகரித்துக் கொண்டுபோகும். எனவே டட்லி இந்த சிறிய வயதில் அரசியல் துறவியாகப்போகிறேன் என்று கூறுவது பலருக்கு ஆச்சரியமாயிருக்கும்.

எதற்காக அவருக்கு இந்த திடீர் தீர்மானம் ஏற்பட்டது? அரசியல் வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டுவிட்டதா, அல்லது தோல்வி கண்டுவிட்டாரா? அல்லது உடல்நிலை அரசியலின் கொந்தளித்த சீவியத்துக்குஇடம் கொடுக்கவில்லையா? இப்படி பலர் சந்தேகிக்கக் கூடும். உண்மை எதுவாயிருக்குமோ?

1953-ம் ஆண்டில் ஒரு தடவை திரு. டட்லி சேனநாயகா இப்படித்தான் அரசியல் வாழ்க்கையை துறந்துவிட்டு புத்தபிக்குவாகப் போகப்போகிறேன் என்று தெரிவித்தார். அரசியலை துறந்தது உண்மை. ஆனால் பௌத்த சங்கத்தில் நல்ல வேளையாகசேரவில்லை. சேர்ந்திருந்தால் மறுபடியும் யு. என். பி. யின் தலைவராக வந்து கடந்த நாலரை வருடங்களாக பிரதமராய் இருந்திருப்பாரா? அச்சமயம் அவர் துறவு பூண்டபோது நாட்டின் நன்மைக்காக அவர் மறுபடியும் யு. என். பி. தலைவராக வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததன் பேரிலேயே மீண்டும் அரசியலில் புகுந்தார்.

சிங்களவரோ, தமிழரோ சோனகரோ அல்லது இலங்கையில் வாழும் எந்த சமூகத்தினரோ திரு. சேனநாயகாவின் நேர்மையிலும் நல்லெண்ணத்திலும் சிறிதளவேனும் சந்தேகப்படமாட்டார்கள். தந்தையார் திரு. டி. எஸ். சேனநாயகாவைப்

பதைத்தவிர கல்வியின்முன்னேற்றத்திலோ நாட்டின்அபிவிருத்தியிலோ அவர் வேறு எந்தச் சாதனையையும் நிகழ்த்தியதாகத் தெரியவில்லை. வடபகுதியிலுள்ள கல்லூரிகளில் விஞ்ஞான கூடங்கள் இருப்பதாகவும் தென்னிலங்கையிலுள்ளகல்லூரிகளுடன் ஒப்பிடுகையில் வடஇலங்கையில் விஞ்ஞானக்கல்வி பெறுவதற்கு விஞ்ஞானகூட வசதிகளிருப்பதாகவும் தென்னிலங்கையில் எந்தஒரு வைபவத்தில் கலந்துகொண்டாலும் வயிற்றெரிச்சலைக்கொட்டிக் கொண்டதுடன் வடபகுதியிலுள்ள விஞ்ஞான பட்டதாரிகளைப் பெருமளவில் இடமாற்றம் செய்து 'பழி' வாங்

தாழ்ந்ததாக ... வரவேண்டும் பருத்தித்துறையில் 1967ம்ஆண்டுநடைபெற்ற அகில இலங்கைதமிழ் காங்கிரஸின் மகாநாட்டில் அதன் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையுரை நிகழ்த்துகையில், தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் இதைத் தடுப்பதற்கு கல்விமான்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து அதன் ஆலோசனையைப் பெறலாமென்றும் யோசனை கூறியிருந்தார். அந்த யோசனை இன்னும் செயற்படவில்லை. இனியாவது இந்த நல்ல யோசனைகள் செயற்படுவதற்கு வழி காணப்படுமா?

## கோப்பாய் கிராமச்சபைக்கு கோரிக்கை:

# "சபாபதி நாவலருக்கு சிலை அமைக்குக"

கோப்பாய், புதன்

'ஐந்தாங்குரவர் ஆறுமுக நாவலருக்குப்பின்னர் சைவசிகாமணியாயும். பரசமய கோளரியாகவும் விளங்கி சைவமும் தமிழும் தழைத்து வளர்ந்திட பிரசங்கங்கள், சமயநூல் வெளியீடுகள் மூலமாகத் தொண்டாற்றிய வடகோவை சபாபதி நாவலருக்குச் சிலையமைப்பதற்கு சைவப் பெருமக்கள் முன்வரல் வேண்டும்'.

இவ்வாறு கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் வெளியிடப்பட்டுள்ள பகிரங்க வேண்டுகோளொன்றில் கே ரப்பட்டுள்ளது. 'சபாபதி நாவலர் வடகோவையில் அவதரித்து, தமிழகம் சென்று, அங்கு திருவாவடுதுறை ஆதீன பதினுருவது மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீசுப்பிரமணிய தேசிகஸ்வாமிகளிடம் அருளுபதேசம் பெற்று, ஆதீன வித்துவானுகக் கடமையாற்றி, சுப்பிரமணிய யோகீந்திரரிடம் 'நாவலர்' பட்டம் பெற்று, தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றினுர். திராவிடப் பிரகாசிகை, சிவகர்ணுமிர்தம், சிதம்பரசபாநாத புராணம், ஞானுமிர்தம் முதலான பல நூல்களை சைவத்தமிழுலகிற்குத் தந்துள்ளார்.

எனவே அவரதுசேவையை நினைவுகூருமுகமாக அவர் பிறந்தகாலத்திலே சிலை அமைப்பதற்கு கோப்பாய் கிராமசபை, கோப்பாய் வாழ் சைவப்பிரமுகர்கள், சமய ஸ்தாபனங்கள் யாவும் முன்வரலவசியம்எனமேலும் அவ்வேண்டுகோளில் கேட்கப்பட்டுள்ளது.

## தி. மு. க...

(3-ம் பககத் தொடர்ச்சி)

ரவாக ஓட்டுப்போடுங்கள்'' என்று அறிமுகப்படுத்திக் கொள்ளும் அவசியம் எனக்கு ஏற்படவில்லை.''

நிருபர்: 2 மூத்த தலைவர்கள் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கும் இந்த நேரத்தில் கட்சித் தோழர்களிடத்திலும் மக்களிடத்திலும் செல்வாக்குப் பெற்றுள்ள நீங்கள சமரசத்திற்கு முயற்சிசெய்ய முன்வருவீர்களா?

எம். ஜி. ஆர்.: இருவருமே போர்க்களத்தில் குதிக்க ஆயத்தமாகிவிட்டார்கள். போர்க்களத்தில் குதிக்கமுடிவெடுக்கு முன்பாக அவர்கள் என்னிடம் ஆலோசனை கேட்டிருந்தால் என் பங்கை நிறைவேற்றியிருப்பேன்.

இருவருமே ஒரு முடிவுக்கு வந்தபிறகு, அவர்களின் முடிவில் தலையிடுவது அவ்வளவு பொருத்தமானது அல்ல

போட்டியில் வெற்றி தோல்வியைத்தான் நாம் எதிர்நோககவேண்டிய நிலையில் இருக்கிறேம்.

நடக்கிறது ஒற்றைத் தனி விண்வெளி விமானியுடன் கட்டளைப்பகுதி- தாய்க்கப்பல்- அம்புலியைச் சுற்றிக் கண்காணித்தபடி வலம் வருகிறது.

### இடம் பார்த்து இறங்கல்

கீழேவிண்வெளிச்செல்வர்கள் இருவரும் தங்கள் நிலா வாகனத்தின் ஆற்றல் மிக்க வேகங்குறைப்பு ஏவுகணை இயக்கத்தைச் சரிப்படுத்துகிருர்கள். மலை முகடுகளும் வட்ட வட்ட ஆழக் குழிகளும் அவர்கள் பார்வையில் வந்து மறைகின்றன. வாகனம் மேலும் மேலும் தாழ்வாக இறங்குகிறது. தழும்பு பட்ட முகம் போலக்கிடக்கும் நிலாமேற்பரப்பில் குண்டு குழியற்ற சமநிலமாகப் பார்த்து இறங்கப் போகிருர்கள். ஒரு பெரிய பள்ளம் அதன் விளிம்புக்கு அப்பால் ஏற்ற இடம் ஒன்று தோன்றுகிறது.

அந்தப் பகுதிக்கு மேலாக நிலா வாகனம் அரைநிமிட நேரம் பறந்த வண்ணம் நிற்கிறது. அதனுள்ளிருந்து நான்கு கண்கள் வாகனத்துக்கு ஆபத்தாகக் கூடிய கல்லுகட்டிகள் குழிகள் உள்ளனவா என்று பார்க்கின்றன. தலைமை விமானி முடிவுஎடுத்து விட்டார்.

''நாங்கள் கீழே இறங்குகின்றேம்'' என்ற அவரது குரல்பூமிக்கு பாய்ந்துவருகிறது வானெலி அலை மீது.

நாலுகால் பூச்சி போன்ற நிலா வாகனம் தரைதட்டி நிற்கிறது. புழுதி கிளம்பிப் பார்வையை மறைக்கிறது மறுகணம் அனைத்தும் தெளிவாகத் தெரிகிறது எங்கும் அமைதி.

பூமிவாசிகளான மனிதர்களில் இருவர் அம்புலியை அடைந்து விட்டனர். மனிதன் முதல் தடவையாக நிலாவில் இறங்கி விட்டான்.

### சீரான திட்டம்

அடுத்த 22 மணி நேரத்துக்கு இவ்வீரர் இருவருக்கும் என்னென்ன வேலைகள் என்பதெல்லாம் கட்டுத்திட்டம் செய்யப்பட்டுள்ளது. அம்புலியைப் பற்றி இவர்களால் எவ்வளவு அறிய முடியுமோ அவ்வளவையும் அறிந்து கொண்டு அங்கு காணும் பொருட்களில் மாதிரிக்குச் சிலவற்றைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு பூமிக்கு மீள வேண்டும். இதுதான் இவர்கள் பணி.

நேரமோ குறைவு. வேலையோ ஆபத்தானது. ஆயினும் இவர்களது திட்




சந்திரனில் இறங்கப்போகும் எட்டுக்கால் பூச்சி போன்ற தாய்க்கப்பலான 'ஈகிள்' இங்கு காணப்படுகிறது. சந்திரமண்டலத்தில் இருக்கும்போது பூமி இப்படித்தான் சிறிய வட்டவடிவமாகக் காட்சியளிக்கும்

1966 முதல் விண்வெளி விமானியாக இருக்கும் டாக்டர் லிண்டு முதல்முதல் அம்புலி செல்லும் வீரர்களில் ஒருவராக இல்லை தான். ஆனுல் அவ்வீரர்கள் அங்கு செய்யப்போகும் பணிகளில் இவரது முத்திரையைக் காணலாம்.

நிலா வாகனம் நிலாத் தரையில் போய் நிற்கும். அதன் விண்வெளி விமானிகள் முதல் மூன்று மணி நேரம் அதன் கருவிகளைச் சேதம் இல்லாமல் உள்ளனவா என்று சோதிப்பதும், மின்னணுக் கருவிகளைச் சரி பார்ப்பதும், தங்களுக்கு வேண்டியவை எல்லாம் பத்திரமாக இருக்கின்றனவா என்று பார்ப்பதுமாக இருப்பர்.

தங்கள் கண்முன்னே விரிந்து விளங்கும் நிலா காட்சியினை ரேடியோ மூலம் ஹூஸ்ட்டன் நிலையத்தாருக்கு விபரமாகவும் அறிவிப்பர்.

அக்காட்சிகளைப் புகைப் படமும் திரைப்படமும் பிடிப்பர்.

இவ்வாறு நிலா வாகனச் சன்னல் வழியே நிலாத் தரைக் காட்சிகளை கண்டு படம் பிடிப்பதால், திடீரென்று புறப்பட்டுத் திரும்ப வேண்டியிருந்தாலும் இவர்கள் வெறுங் கையாக வர மாட்டார்கள்.

'திட்டம் நெடுகிலுமே இப்படித்தான். இன்சூரன்ஸ் என்று வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளுங்கள். எந்த நேரத்திலும் அவசர ஏற்பட்டுத் திட்டத்தை இடையிலே முடித்துக் கொள்ள நேரலாம். நிலாத் தரையிலிருந்து எது கிடைத்தாலும் பயன்படும். ஒரு கல், ஒரு படம் ஆயினும் புதிதாக அறிந்துகொள்ள நமக்கு உதவும்' என்று விளக்கிருர் லிண்டு.

கருவிகளையெல்லாம் சரி பார்த்து முடிந்ததும், விண் திசை நடத்திப் பார்த்தவையே யாகும். நிலாவாகன விமானி வாகனத்தின் கதவண்டை இருந்து படம் பிடிக்க, தலைமை விமானி தரையில் இறங்கி நிற்பார். இறங்கிய இவர் நிலாவாகனத்தில் உள்ள ஒரு பெட்டியைத் திறப்பார்.

அதனுள்ளிருந்து நூதனமான ஒரு கிண்ணத்தை எடுப்பார். மிகவும் முக்கியமான ஒரு பொருள் இது பயணத்தை இடையிலே முடித்துக் கொள்ள நேரினும் அம்புலியைப் பற்றிப் புதிதாய் அறிந்துகொள்ள இது உதவும்.

கிண்ணத்தால் நிலாவின் மண்ணை அள்ளுகிருர் தலைமை விமானி. கிண்ணம் நிரம்பியதும் மூடியால் இறுக்கி மூடுகிருர். ஒரு கிலோ கிராம் நிலாப் பொருள் பூமிக்கு வரத் தயாராகி விட்டது.

அடுத்த நிலாவானவிமானி தரையில் இறங்க வேண்டும்.

### வாகனத்தைச் சரிபார்த்தல்

இருவரும் தங்கள் வாகனத்தைக் கவனமாகப் பார்வையிடுகிருர்கள. இறங்கிய வேகத்தில் ஏதாவது உள்ளே சேதம் அடைந்திருக்குமா, ஆக்ஸிஜன் எங்காவது பொத்துக் கொண்டு தப்புகிறதா, இன்றியமையாத எரிபொருள் சொட்டி வடிகிறதா என்றெல்லாம் நன்கு ஆராய்வர்.

ஆனுல் அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை என்று கண்டதும் நிலாவாகனத்தை நுணுக்கமாக அவர்கள் படம் பிடிக்கத் தொடங்குவர். அதன் கால்கள், கால் வட்டுகள், இவற்ருல் பெயர்த்தெறியப் பட்டகல், கட்டிகள் புழுதி ஆகியவற்றையெல்லாம் முதன்மையாகப் படம் பிடித்துக் கொள்வர்.

இவையெல்லாம் நிலாவாகனத்தின் அமைப்பை இனி

பயணம் முழுவதிலுமே இதுதான் மிகவும் நெருககடியான கட்டம் ஆகவே கூடுமானவரை பிசகு கரு இடம் இல்லாதபடி இயந்திரம் எளிதாக இயககுமாறு அமைககப்பட்டுள்ளது. இறங்குவதற்குப் பயன் படுத்திய ஏவுகணை இயந்திரத்தை முடுககலாம் திசை திருப்பலாம். ஆனுல் மேலே கிளம்புவதற்கான இயந்திரத்தை அப்படி ஏதும் செய்யவேண்டியதில்லை. செய்யவும்முடியாது எரிபொருளை திறந்துவிட வேண்டும்: இயந்திரத்தை இயககவேண்டும். அவ்வளவு தான் கிளம்பிவிடும்.

# ஜி. ஸி ஈ. தராதரப்பத்திர மோசடி அம்பலம்

## லட்சக்கணக்காக பணம் சம்பாதித்தார்களாம்

கோட்டை, புதன்

ஜி. சி. ஈ. சாதாரண உயர்தர தராதரப் பத்திரங்கள் வழங்குவதில் மோசடி நடைபெறுவதாக குற்ற கண்டுபிடிப்பு இலாகா கண்டு பிடித்துள்ளது. இப் பரீட்சைகளில் சித்தியடையாதவர்களுக்கும் விசேஷ சித்தியடையாதவர்களுக்கும் சித்தியடைந்ததாகவும் விசேஷ சித்தியடைந்ததாகவும் தராதரப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக குற்றத் தடுப்பு இலாகா அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதைக கண்டுபிடித்துள்ள இன்ஸ்பெக்டர் ஏச் எஸ் ஜயசூரியா இதுசம்பந்தமான விரிவான அறிக்கையொன்றை கோட்டை மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்காவிடம்சமர்ப்பித்துள்ளார். கள்ளப் பத்திரங்கள் வழங்குவதாகக் கருதப்பட்ட 8 பேருக்கு கட்டளை அனுப்புமாறு இன்ஸ்பெக்டர் கேட்டுள்ளார்.

இந்த பரீட்சைகளை எழுதாதவர்களுக்குக் கூட தராதரப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு கள்ளமாகப் பத்திரங்களைப் பெற்ற மாணவர்கள் அரசாங்க தனியார் துறைகளில்வேலைசெய்கிருர்கள் எனவும் கண்டுபிடிககப்பட்டுள்ளது. இவ்வாறு கள்ளமாகப் பத்திரங்கள் வழங்குவதில் ஈடுபட்டுள்ள கோஷ்டி இத்தொழிலால் லட்சககணககாகப் பணம் சம்பாதித்துள்ளார்களாம்.

மாணவர்களின் பரீட்சை முடிவுகள் பதியப்பட்டுள 'பரீட்சை பதிவுப் புத்தகத்திலிருந்து சில பககங்கள் அகற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே பதில்பரீட்சை ஆணையாளர் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இக கள்ளத்தொழிலில் ஈடுபட்டுள்ளதாக கண்டுபிடிகப்பட்டுள்ள எம். இ. ஜெ. பெரேரா, இ. ஜெ. கப்ருல், ரி. கனகரத்தினம், கே. சுகததாசா, ரி. ஸால் பெரேரா, சீலாவதி மெனிகா செனிவரத்தின, ரி. சேதுகாவலர், கியு. பி. மில்ருேஸ் ஆகியோருககு கோட்டை மாஜிஸ்திரேட் கட்டளை அனுப்பியுள்ளார்.

## லொறி-ரயில் விபத்து

கோட்டை, புதன்

கதிர்காமம்சென்ற யாத்திரிகர்கள் விபத்தில் சிக்கினுர்கள். கரையோரப் பாதையில் நடந்த இவ்விபத்தில் காயமடைந்த 20 பேர்கள் பலப்பிட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாத்தறையிலிருந்து கொழும்பு சென்ற கடுகதி ரயிலில் மோதுப்பட்ட லொறி பல யார்தூரம் இழுபட்டுச்சென்றது. லொறியில் பிரயாணம் செய்தவர்களே காயமடைந்தார்களெனக் கூறப்படுகிறது.

3சானகரோ அல்லது இலங்கையில் வாழும் எந்த சமூகத்தினரோ திரு. சேனநாயகாவின் நேர்மையிலும் நல்லெண்ணத்திலும் சிறிதளவேனும் சந்தேகப்படமாட்டார்கள். தந்தையார் திரு. டி. எஸ். சேனநாயகாவைப் போலவே மகனும் ஒற்றுமையான ஓர் இலங்கையை வளர்ப்பதற்குப் பாடுபட்டு வந்திருக்கிருர். இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் ஒரே நாட்டு மக்கள், அவர்களுக்கிடையே வேற்றுமைகள் இருக்கலாகாது, எல்லோடும் சேர்ந்து ஒத்துழைத்து நாட்டை விருத்தி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தீவிரமான நம்பிக்கைஉள்ளவர்.

அவர் அரசியலைவிட்டு பிரிந்தால் அவருடையஇடத்துக்கு யார்வருவார்கள்? அவரது ஒற்றுமைக் கொள்கையைப் பின்பற்றக் கூடியவரா அல்லது தீவிர வகுப்புவாதியா? அவருடையபிரிவு தமிழரை எவ்விதம் தாக்கும்?

இக்கேள்விகள் இப்பொழுதே எழத்தொடங்கியிருக்கிறபோதிலும் அடுத்த பொதுத்தேர்தலில் தாம் வெற்றிபெற்ருல் நாட்டை ஸ்திரமாக்கிய பின்னரே துறவு பூணுவதாக டட்லி கூறியிருப்பதால் தேர்தல் முடியும்வரை பொறுத்திருந்து பார்க்கலாம் என்ற ஆறுதல் ஒன்றுண்டு.

— வழிப்போக்கன்

## 220,000தொன் உப்பு உற்பத்தி செய்யப்படும்

கோட்டை, புதன்

1975-ம்ஆண்டில்இலங்கை 220,000 தொன் உப்பை உற்பத்தி செய்யலாம் என எதிர் பார்க்கப் படுகிறது. நாட்டுக்குத் தேவைப்படும் 92000தொன் உப்பைவிட மிகுதியை உப்பு கூட்டுஸ்தாபனம் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யலாம்இப்பொழுது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உப்பு போதாமையால் தேவையைப்பூர்த்திசெய்யக் கூட்டுஸ்தாபனம் உப்பை இறக்குமதிசெய்கிறது.

## மட்டக்களப்புக்கு பஸ் சேவை

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை இ. போ. ச. பகுதி பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி - கொடிகாமம் ஊடாக மட்டக்களப்புக்கு ஒரு பஸ் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org